இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
இதழ் 380
சனி, 28 பெப்ரவரி, 2026 |
பக்கங்கள் 17
www.ilakku.org



# சுரேஷ் சாலே கைதும் ஈஸ்டர் மர்மங்களின் திறவுகோலாகுமா?

விதுரன்



## ஈழ விடுதலைப் போராட்டத்தில் தியாகச்செம்மல் நல்லகண்ணுவின் சமரசமற்ற அறப்போர்

## இந்திய ஏஜ மாநாடு : அடிப்படை மாற்றம் இல்லாமல் மாநாடு மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்த முடியாது

ஆதி: சட்டவாளர் -தமிழ்நாடு





# முழு பிராந்தியத்தையும் உலுக்கப்போகும் ஈரான் போர்

வேல்ஸில் இருந்து அருஸ்

# வெளியக தலையீட்டை நிராகரிப்பதாக இலங்கை மீண்டும் ஐ.நா.வில் தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சுமித் தசநாயக்க, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயர்மட்டப் பிரிவின் கீழ் இடம்பெற்ற அமர்வில் உரையாற்றுகையில் வெளிப்புற தலையீட்டை நிராகரிப்பதாக கூறியுள்ளார்.

பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றத்தை நோக்கிய இலங்கையின் தொடர்ச்சியான பயணத்தையும் அவர் எடுத்துரைத்ததாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் 2025ஆம் ஆண்டு மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்த கருத்துக்களை சுட்டிக்காட்டிய இலங்கை தூதுவர், வெளிப்புற நடவடிக்கையை எதிர்க்கும் அதேவேளையில் நெறிமுறை நிர்வாகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை முன்னேற்றுவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதாக இதன்போது கூறியுள்ளார்.

மேலும் காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் ஆகியவற்றுடன் உள்நாட்டு நிறுவனங்களை வலுப்படுத்த இலங்கை அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து மனித உரிமைகள் பேரவைக்கு விளக்கியுள்ளார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான விவாதங்கள் நடைபெற்று

தொடர்ச்சி: பக்கம் 08

## உலக பத்திரிகை புகைப்படக்கண்காட்சி கொழும்பில்



2025 ஆம் ஆண்டுக்கான உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சி கொழும்பு, ஒன்கோல் பேஸ் மோல் வளாகத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இந்த புகைப்படக்கண்காட்சியை நெதர்லாந்து தூதரகம், இலங்கை பத்திரிகை நிறுவனத்துடன் இணைந்து நடத்துகிறது.

இந்த கண்காட்சியை மார்ச் மாதம் 08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை பார்வையிடலாம். இதனை தொடர்ந்து மார்ச் மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 17ஆம் திகதி திங்கட்கிழமை வரை கண்டியில் சஹஸ் உயன மண்டபத்திலும் பார்வை யிடலாம்.

141 நாடுகளிலிருந்து 3,778 புகைப்படக் கலைஞர்கள் சமர்ப்பித்த கிட்டத்தட்ட 60,000 புகைப்பட பதிவுகளை 31 புகைப்பட ஊடகவியலாளர்களை கொண்ட பிராந்திய மற்றும் உலகளாவிய நடுவர் குழுக்கள் கவனமாக மதிப்பாய்வு செய்துள்ளன.

அவற்றில் 2025 ஆம் ஆண்டுக்கான சிறந்த உலக பத்திரிகை புகைப்படங்களாக 42 புகைப்படக் கலைஞர்களின் புகைப்படைப்புகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைவுக்கு எதிராக மற்றுமொரு தீர்மானமும் நிறைவேற்றம்!



முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபினை மீளப் பெறப்படவேண்டும் என்று கோரி, சாவகச்சேரி நகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனநாயகத்திற்கு விரோதமாகவும், அடிப்படை மனித உரிமைகளைக் கேள்விக்கு உள்ளாக்கும் வகையிலும் தற்பொழுதும் வலுவிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கோர முகத்தை அனுபவித்த மக்கள் என்ற அடிப்படையிலும் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபையின் மாதாந்த அமர்வின்போது இந்த தீர்மானம்

தொடர்ச்சி: பக்கம் 12

# மோடியின் இஸ்ரேல் பயணம் - ஈரான் கவலை




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரேலுடனான தனது நாட்டின் உறவுகளை அதன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் பாராட்டியுள்ளார், அதில் அவர் நாகரிக மரபுகள் மற்றும் தத்துவார்த்த ஒற்றுமைகளை மேற்கோள் காட்டினார். நெசெட்டில் இந்தியப் பிரதமர் மோடி முதன் முதலில் உரையாற்றிய போது, பாதுகாப்பு இருதரப்பு உறவுகளின் "முக்கியமான தூண்கள்" என்றும் விவரித்துள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பரில், பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நாங்கள் கையெழுத்திட்டோம், இன்றைய நிச்சயமற்ற உலகில், இந்தியா மற்றும் இஸ்ரேல் போன்ற நம்பகமான கூட்டாளர்களிடையே வலுவான பாதுகாப்பு கூட்டாண்மை மிக முக்கியமானது. இருதரப்பு உறவுகளை ஏற்படுத்துவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, நாடுகள் 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய உறவால் இணைக்கப்பட்டிருந்தன.

யூத வணிகர்கள் மத்தியதரைக் கடலை இந்தியப் பெருங்கடலுடன் இணைக்கும் கடல் பாதைகளில் பயணம் செய்தனர். அவர்கள் வாய்ப்பு மற்றும் கண்ணியத்தைத் தேடி வந்தனர். மேலும், இந்தியாவில், அவர்கள் நம்மில் ஒருவராக மகாராஷ்டிராவின் பெனே இஸ்ரேல், கேரளாவின் கொச்சின் யூதர்கள், கொல்கத்தா மற்றும் மும்பையின் பாக்தாதி யூதர்கள், வடகிழக்கின் பினி மெனாஷே ஆகியோர் இந்தியாவை வளப்படுத்தியுள்ளனர்" என்று மோடி மேலும் கூறினார்.

தொடர்ச்சி: பக்கம் 15

## இந்தியா மீது 126% வரியை விதித்தது அமெரிக்கா



உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஆதரிப்பதற்காக, இந்தியா, இந்தோனேசியா மற்றும் லாவோஸ் ஆகிய நாடுகளில் இருந்து சூரிய மின்கலங்கள் மற்றும் பேனல்கள் மீது அமெரிக்கா புதிய வரிகளை கடந்த செவ்வாய்கிழமை(24) அறிவித்துள்ளது.

மூன்று ஆசிய நாடுகளில் உள்ள நிறுவனங்களிலிருந்து சூரிய மின்கல இறக்குமதிக்கு அமெரிக்க வர்த்தகத் துறை பூர்வாங்க வரிகளை நிர்ணயித்துள்ளது. உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு நியாயமற்ற முறையில் மானியம் வழங்குவதாக அந்த நாடுகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க சூரிய மின்கல உற்பத்தி மற்றும் வர்த்தகத்திற்கான கூட்டணி, மானியங்கள் குறித்து விசாரணை நடத்தக் கோரியுள்ளது, அமெரிக்க உற்பத்தியைப் பாதுகாக்க ஒரு விசாரணை தேவை என்று அது வலியுறுத்திவருகின்றது.

தொடர்ச்சி: பக்கம் 16

## ஐ.நா பாதுகாப்புச் சபையின் தலைவராக ட்ரம்பின் மனைவி



மார்ச் 2 ஆம் தேதி நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்திற்கு அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி மெலனியா ட்ரம்ப் தலைமை தாங்குவார் என ஐ.நா.வுக்கான அமெரிக்க நிரந்தர பிரதிநிதி மைக் வால்ஸ் தெரிவித்துள்ளார்.

"நாங்கள் வரலாற்றை உருவாக்குகிறோம்! அமெரிக்கா கவுன்சிலின் தலைவராகப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே பாதுகாப்பு கவுன்சிலுக்குத் தலைமை தாங்கும் முதல் அமெரிக்க முதல் பெண்மணி மெலனியா ட்ரம்ப் ஆவார். ஐ.நா.வை மீண்டும் சிறப்பானதாக்குவோம்!" என்று அவர் எழுதியுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் சுழற்சி முறையில் நடைபெறும் தலைமைப் பதவி மார்ச் 1 முதல் ஒரு மாதத்திற்கு அமெரிக்காவிற்கு செல்கிறது.

உலகளாவிய அமைதியை உறுதி செய்வதற்கான கல்வி

தொடர்ச்சி: பக்கம் 15

## ஆயுதங்களுடன் கியூபாவுக்குள் ஊடுருவ முயன்ற அமெரிக்க படகு



கியூபா எல்லைக்குள் நுளைந்த அமெரிக்க அதிவேக படகின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டதுடன், 6 பேர் கைது செய்யப்பட்டதாக கியூபாவின் உள்துறை அமைச்சகம் கடந்த வியாழக்கிழமை(26) தெரிவித்துள்ளது.

வில்லா கிளாரா மாகாணத்தின் வடக்கு கடற்கரையிலிருந்து சுமார் ஒரு கடல் மைல் தொலைவில் அமெரிக்காவின் புளோரிடா பதிவு செய்யப்பட்ட FL7726SH கப்பலை எல்லை படையினர் புதன்கிழமை(25) அணுகியபோது மோதல் ஏற்பட்டுள்ளது. படகில் இருந்த நபர்கள் முதலில் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் கியூபா ரோந்து

தொடர்ச்சி: பக்கம் 15

# யார் இந்த சுரேஷ் சாலே.? ஏன் இந்த கைது.?

**பாக்கிய செல்வம்**

தற்போது இலங்கையில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதும், ஊடகப்பரப்பில் முக்கிய இடம்பிடித்ததுமான ஓய்வு நிலையில் இருந்த முன்னால் இராணுவ புலனாய்வு பணியகத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயின் கைது விடயம்.



இவர் 1984 ஆண்டு காலப்பகுதியில் படைத்துறையில் கடமையாற்றிய போது தமிழ் இளைஞர்களை கைது செய்து வதை செய்த சம்பவங்களும் நடந்தன. 2005 நவம்பர் 17 ல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் மகிந்தராஜ பக்ஷே வெற்றியீட்டிய பின்னர் தனது சகோதரர் கோட்டாவின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பணியாற்றினார்.

அப்போது இருந்து கோத்தபாயாவுக்கு மிக்நெருங்கியவராக இருந்த சுரேஷ சாலே இராணுவத்தில் பிரதானியாக நியமிக்கப்பட்டு பின்னர் விடுதலைப்புலிகளுக்கு எதிராக புலனாய்வு அதிகாரியாகவும் தமிழ் ஆயுத ஒட்டுக்குழுக்களை வழிப்படுத்துபவராகவும் செயல்பட்டு வந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பதவி சுரேஷ் சாலேவுக்கு வழங்கப்பட்டது. அந்தக் காலப் பகுதியில் பிள்ளையான், கருணா மற்றும் ஆசாத் மௌலானா ஆகியோருக்கு மூன்று செய்மதித் தொலைபேசிகள் சுரேஷ் சாலே மூலம் வழங்கப்பட்டிருந்தன. ஒரு கட்டத்தில் கருணா விடமிருந்த தொலைபேசியை மீளப் பெற்றுக் கொண்டதாகவும் கூறப்பட்டது.

**இவ்வாறான காலத்தில்தான் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான..**

2005 டிசம்பர்25ல் மாமனிதர் ஜோசப்பரராசசிங்கம்,
2006 நவம்பர் 10 ல் மாமனிதர் ரவிராஜ்,
2008 மார்ச் 06 ல் மாமனிதர் சிவநேசன்,
2005 பெப்ரவரி 08 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சந்திரநேரு.

ஆகியோர் ஜனாதிபதி மகிந்த பதவி ஏற்ற பின்னர் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்த படுகொலைகளில் முக்கியமானவை.

2018 நவம்பர் 30 ல் மட்டக்களப்பு வவுணதீவு பொலிசார் சாவடியில் இரண்டு பொலிசார் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதனை செய்தவர்கள் 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் காத்தான்குடியை சேர்ந்த இருவர் என்பது பின்னர் தெரியவந்தது.

ஆனால் இந்த உண்மையானவர்களை கைது செய்யாமல் திசை திருப்பும் நோக்காக முன்னாள் விடுதலைப் புலிகள் மீது திசைதிருப்பியும், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மீதும் அவருடைய வாகனத்தில் 2018 நவம்பர் 27 ல் தாண்டியடி சந்தியில் நடைபெற்ற மாவீரர் தினத்தில் ஏற்றிச்சென்றதாக ஒரு புனை கதையை சோடித்து அந்த குற்றச்சாட்டில் கொழும்பு குற்றப்புலனாய்வு விசேட பொலிசார் மட்டக்களப்புக்கு வருகை தந்து 2018 டிசம்பர் 22 லும், பின்னர் கொழும்பு பயங்கரவாத குற்றப்புலனாய்வு 4 ம் மாடியில் 2019 மார்ச் 18 லும் பா.அரியநேத்திரன் இரண்டு தடவை விசாரிக்கப்பட்டார்.

அந்த விசாரணைகளை நடத்துமாறு தற்போது கைதான சுரேஷ் சாலே தான் உத்தரவிட்டதாக பின்னர் அறியப்பட்டது. உண்மையான குற்றவாளிகள் 2019 ஏப்ரல் 21 ல் தற்கொலை குண்டுதாரியான ஸஹ்ரானின் சாரதியான “கபூர் மாமா” என்றழைக்கும் மொஹம்மட் ஷரீப் ஆதம்லெப்பை வழங்கிய தகவலையடுத்து வவுணதீவில் இரு பொலிஸார் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய காத்தான்குடியை சேர்ந்த இரு சந்தேக நபர்களை குற்றப் புலனாய்வு பிரிவு பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் கைதாகவிட்டால் அந்த கொலைக்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டு இருப்பார் என கொழும்பு குற்றப்புலனாய்வு அதிகாரி ஒருவர் கொழும்பு சட்டத்தரணி ஒருவரிடம் கூறியதாக பின்னர் தெரிந்தது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பாக பல்வேறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயின் பெயரை தொடர்புபடுத்தி பிரித்தானியாவின் ‘சனல் 4’ தொலைக்காட்சி 2023ஆம் ஆண்டு ஒரு விசேட ஆவணப்படத்தை வெளியிட்டு இருந்தது. ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இராஜாங்க அமைச்சராக இருந்த பிள்ளையானின் செயலாளராகப் பணியாற்றிய ஹன்சீர் அசாத் மௌலானா என்பவரே இத்தொடர்பு குறித்து வெளிப்படுத்தியிருந்தார்.

**தொடர்ச்சி: பக்கம் 16**

# ஆசிரியர் தலையங்கம் | 28 பெப்ரவரி, 2026

## ஈழத்தமிழர் இறைமை பேணப்படுமென்ற நம்பிக்கையை மீள்வித்துள்ள பிரித்தானிய தமிழ் இளையோரமைப்பின் கூட்டு முயற்சி

கடந்த வாரத்தில் ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியத்தின் அழைப்பின் பெயரில் நேரடி விவாதத்தில் கேள்வி கேட்கும் வகையில் இடம்பெறவிருந்த சிறிலங்காவின் ஜாதிக பெரமுனையின் தலைவர்களில் ஒருவரும் சிறிலங்காவின் முன்னாள் அரசத்தலைவர் மகிந்த ராஜபக்சாவின் மகனுமான நாமல் ராஜபக்சாவுடனான விவாத அரங்கங்கள், தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் பிரித்தானிய தமிழ் இளையோரமைப்பினர் ஐக்கிய இராச்சியத்தின் பல்கலைக்கழகங்களில் உள்ள தமிழ் மாணவர் சங்கங்களின் கூட்டுடன் முன்னெடுத்த மதிநுட்பம் மிகுந்த சனநாயகவழி எதிர்வினையாற்றல்கள் மூலம் கைவிடப்பட்டன. இதனை அண்மைக்கால ஈழத்தமிழர் இறைமை மீளுறுதிப் போராட்ட வரலாற்றில் இமாலயச் சாதனையாக இலக்கு கருதி செயற்பட்ட இளையோர்களைப் பாராட்டுகிறது.

இந்த நிகழ்வு, ஒன்றல்ல இரண்டு உலகின் முதன்மைப் பல்கலைக்கழகங்கள் தங்களின் மாணவர் ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட விவாத அரங்க நிகழ்வுகளைக் கைவிட்ட வரலாறாக உலகில் பதிவாகியுள்ளது. இது இயலாதென்பதையும் இயலுமாக இளையோரும் மூத்தோரும் ஒன்றிணைந்த உரிய எதிர்வினையால் மாற்ற முடியுமென்று நிரூபித்துள்ளது. இந் நிகழ்வு ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் ஈழத்தமிழ் செயற்பாட்டாளர்களுக்கு ஈழத்தமிழர் மேலான எந்த அழுத்தத்தையும் கண்டு பரக்கப் பரக்கச் செயற்படாது வரவரக்கண்டு அதற்கான எதிர்வினையை மக்களின் ஒருமைப்பாட்டுடன் தேசியத்தின் மீதான உறுதியுடன் இறைமையின் உண்மைத்தன்மையை முன்னிறுத்தி சனநாயகப் போராட்டம் மூலம் முன்னெடுத்தால் ஈழத்தமிழர் இறைமையைப் பேணமுடியும் என்கின்ற உண்மையையும் நம்பிக்கையையும் அளித்துள்ளது. இந்நிகழ்வு கடந்த 17 ஆண்டுகளாக ஈழத்தமிழர்களால் யாராலும் பயன்தரக்கூடிய முறையில் அரசியலில் எதையும் செய்ய முடியாதிருக்கிறதென இருந்து வந்த இறுக்கத்தன்மையை கட்டுடைத்துள்ளது.

விடாத உறுதியுடனான சிறிய முயற்சிகள் பெரிய சாதனைகளை வரலாற்றில் ஏற்படுத்தும் என்பதற்கு உதாரணமாக அமைந்த இந்த நிகழ்வு நடந்த அதே வார இறுதியில் இலண்டனில் இடம்பெற்ற பிரித்தானியாவின் தமிழ்மொழி பண்பாட்டு மரபுரிமை மேம்பாட்டுக் கூட்டணியின் அதிதிறன் பெற்ற மாணவர்களின் மதிப்பளிப்பு விழாவில் கல்வியில் ஒரு பாடத்திட்டம் முன்னெடுக்கப்படும் வழமையே எந்த நாட்டிலும் உள்ளது. எனவே 22.05.1972 முதல் அரசற்ற தேசஇனமாக உலகில் தேசங்கடந்துறை மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழர்கள் தமிழ்மொழிக் கல்வியைப் பன்முகப்படுத்தி தமிழர் ஒழுங்கிணைப்புக் குழுவின் மூலம் தேசியத்தலைமையால் கட்டமைக்கப்பட்ட ஈழத்தமிழரின் தேசியக்கல்வியின் ஒருமுகப்பட்ட சிந்தனைப் பள்ளி முறையை (School of Thought) சீரழிக்க வேண்டாமென்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கல்வி ஊடகம் என்பன சமகாலத்தில் அறிவூட்டல் வழி மக்களுக்குச் சக்தியளிக்கும் முக்கிய தளங்களாக உலகில் திகழ்கின்றன. இவற்றில் தேசங்கடந்து வாழும் ஈழத்தமிழரிடம் ஒருமைப்பாடு இல்லையென்றால் மக்களுக்கு ஈழத்தமிழர்கள் வாழும் நாடுகளிலும் தாயகத்திலும் சக்தியளித்தல் தடுமாற்றம் அடையும். இதனால் ஈழத்தமிழ் இளையோர் தங்களின் அடையாளத்தை தாய் மண்ணில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை உள்ள தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையின் அடிப்படையிலான தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை அறிந்து கொள்ளுதலில் தடுமாற்றமடைந்து தங்கள் ஈழத்தமிழ்த் தேசியத்தவர் என்கின்ற அடையாளத்தை இழப்பர். எனவே இறைமை என்பது ஒருமைப்பாட்டினை அடித்தளமாகக் கொண்டதால் ஒருமைப்பாட்டை யார் எங்கு பலவீனப்படுத்தினாலும் அவர்கள் இறைமை நீக்கத்துக்கும் தேசிய நீக்கத்துக்குமே கல்வியிலும் ஊடகத்திலும் பன்முனைவாக்கங்களைச் செய்பவர்களாகவே அறிந்தோ அறியாமலோ மாறுவார்கள்.

இன்று சிறிலங்காவின் தேசிய மக்கள் சக்தியின் பிரதமர் ஹரிணி அமரசேகர அவர்கள் சிறிலங்காவுக்கான கல்விச் சீர்திருத்தத்தை சிறிலங்காவினருக்கான தேசியத்தன்மையை தாயகத்தன்மையை தன்னாட்சித்தன்மையை மேலும் மீளுறுதி செய்யும் வகையில் முன்னெடுத்து வருகின்ற நேரத்தில் ஈழத்தமிழர்களின் தேசியத்தன்மையை தாயகத்தன்மையை தன்னாட்சித்தன்மையை இறைமையின் இருப்பை ஒரே பாடத்திட்டத்தால் அறிவாக்க வேண்டிய பணியை ஈழத்தமிழர்கள் அனைத்துலகிலும் செய்வதன் மூலமே தமிழ்மொழி பண்பாடு மரபுரிமை மேம்படும் என்பதே இலக்கின் எண்ணமாகவுள்ளது. எனவே பாடத்திட்டம் ஒரு ஊடகமுறைமை என்பது சமகாலத்தின் கட்டாயமாகிறது என்பதை இலக்கு வலியுறுத்திக் கூறவிரும்புகிறது. அணுகுமுறைகள் மாறலாம் ஆனால் இலக்கு ஒருபாடத்திட்டத்தை ஒரு ஊடகக் கொள்கையை கொண்டதாக அமைதல் காலத்தின் தேவையாகிறது.

இதனுடன் இணைந்ததாகவே சிறிலங்காவின் புதிய அரசியலமைப்பினை எவ்வாறு எதிர்கொள்வது என்கின்ற ஈழத்தமிழ் அரசியல்வாதிளினதும் செயற்பாட்டாளர்களினதும் அணுகுமுறைகளையும் எடுத்து நோக்க வேண்டியுள்ளது. ஒரு மக்களின் இறைமை மூன்று தளங்களில் மீளுறுதி செய்யப்பட்டலாம். ஒன்று அந்த மக்களின் வரலாற்றுத் தாயகத்தில் அவர்கள் தொன்மையும் தொடர்ச்சியுமாக தேசஇனமாக வாழ்வதை சான்றாதாரங்களுடன் நிரூபித்து ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் என்ற தகுதிக்குத் தாங்கள் உரியவர்கள் என்ற உரிமை வழி ஐக்கியநாடுகளின் அனைத்துலக சட்டங்கள் வழி உறுதி செய்வது. இதனைத் தமிழரசுக்கட்சி என்ற 1949 முதல் 1975 வரையான ஈழத்தமிழரின் அரசியல் கட்சியின் பரிணாமத்தில் காணலாம்.

அடுத்தது சட்டத்தின் மூலம் அனைத்துலக சட்டங்களுக்கு ஏற்பத் தங்களின் இருப்பையும் இறைமையையும் உறுதி செய்வதன் வழி மீளுறுதி செய்வது. இதனைத் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் 1945 முதல் இன்று வரையான வரலாற்றுப் பரிணாமத்தில் காணலாம். இறுதியானது ஒரு மக்கள் இனம் தனது உயிரையும் பொருட்படுத்தாது தனது இறைமைக்காகப் போராடுவதன் மூலம் இறைமையை மீளுறுதி செய்வது. இதனை 1978 முதல் 2009 வரையான ஈழத்தமிழரின் நடைமுறையரசிலும் அதனை உறுதிப்படுத்திய ஈழத்தமிழரின் தேசிய விடுதலைப்போராட்டத்திலும் காணலாம்.

இன்று வரலாற்று வழியாக இறைமையை மீளுறுதி செய்வதும் உயிரையும் பொருட்படுத்தாது மீளுறுதி செய்வதும் ஈழத்தமிழர்களைப் பொறுத்த வரை உலக வல்லாண்மைகள் பிராந்திய மேலாண்மைகள் சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்பு நோக்கிலான அரசியல் கொள்கைகள் கோட்பாடுகளை 1948 முதல் இன்றுவரை அனைத்துலக சட்டங்களுக்கு ஏற்புடைய செயலாக வெளிப்படுத்தி ஈழத்தமிழரின் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை கொண்டிருக்கும் போர்த்துக்கேயரால் 1621 இல் 116 ஆண்டு முயற்சியின் பின்னர் 37 ஆண்டுகளும் ஒல்லாந்தரால் 1658 முதல் 138 ஆண்டுகளும் பிரித்தானியரால் 156 ஆண்டுகளும் அரசுகளால் கையகப்படுத்தப்பட்ட இறைமை யில் அரசியல் விடுதலைக்காகப் போராடியவாறே வாழ்ந்து, பிரித்தானியர்களால் காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையாக சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமையும் 1948 முதல் 1972 வரை அரசியல் விடுதலைக்காகப் போராடி 1972 முதல் இன்று வரை 54 ஆண்டுகள் அரசற்ற தேசஇனமாகச் சிறிலங்கா என்னும் படைபல ஆக்கிரமிப்புக் கொண்டு தங்களின் தாயகத்தை ஆக்கிரமித்து தங்களின் அரசியல் பணிவை இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்துவதன் மூலம் பெறும் ஆக்கிரமிப்பு அரசிலிருந்து 1975இல் பாராளுமன்ற விலகலுடன் கூடிய தன்னாட்சிப் பிரகடனத்தின் மூலமும் 1976ம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானமாகத் தங்களின் பிரிக்க இயலாத தன்னாட்சி அதிகாரத்தின் வழியாகத் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியுடன் கூடிய வளர்ச்சியை முன்னெடுக்க சிங்கள தேசத்திற்கும் உலகிற்கும் அறிவித்து அதனை 1977 தேர்தல் மூலம் குடியொப்ப ஆணையாக வெளிப்படுத்திய வரலாற்றுப் பின்னணியில் 1978 முதல் 2009 வரை நடைமுறையரசில் அதனை உறுதிப்படுத்தி அதற்கான அனைத்துலக அங்கீகாரத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த நிலையில் 2009 இல் சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பின் மூலம் தேசமாக 146000 ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்குள்ளாக்கப்பட்டு நடைமுறையரசின் உட்கட்டுமானங்கள் அனைத்தும் சிறிலங்காவின் இனத்துடைப்பால் சிதைக்கப்பட்டு இன்று வரை 17 ஆண்டுகள் சிறிலங்காவின் பண்பாட்டு இனஅழிப்புடன் கூடிய நில ஆக்கிரமிப்பாலும் தேசிய நீக்கத்தாலும் இறைமை நீக்கத்தாலும் இன்று சொந்தத் தாயகத்திலேயே அடிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் சிறிலங்காவின் பயங்கரவாததடைச்சட்டம் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டம் இரண்டினாலும் இனங்காணக்கூடிய அச்சத்தை சந்திக்கும் நாளாந்த வாழ்வில் சட்டத்தின் மூலம் இறைமைய மீளுறுதி செய்ய இயலாத நிலையில் ஏற்கனவே ஏற்கப்பட்ட திம்புப் பேச்சுவார்த்தை என்னும் அனைத்துலக ஏற்புக்கொள்கையை முன்னிறுத்தி தன்னாட்சியுடன் கூடிய கூட்டாட்சி என்பதன் வழி இருப்பை உறுதி செய்யும் முயற்சியைச் சிறிலங்காவின் புதிய அரசியலமைப்பில் நிலைப்படுத்த தமிழ்த்தேசிய மக்கள் பேரவையினர் நல்லூர் தீர்மானத்தை இம்மாதம் 15ம் திகதியும், இம்முயற்சி வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை சிறிலங்கா உள்வாங்கும் முயற்சியாக மாறிவிடக்கூடாது, அப்படி நடந்தால் எக்காலத்திலும் தன்னாட்சியின் அடிப்படையில் இறைமையை மீளுறுதி செய்ய இயலாது என இம்மாதம் 14ம் நாள் ஈழத்தமிழர் உரிமைகள் பெருமன்று திருகோணமலைத் தீர்மானத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். இந்நிலையில் இருதரப்பினரும் நேரடியான விவாத அரங்குகளை அமைப்பதன் மூலமாகவே எதார்த்த அரசியலையும் இலட்சிய உறுதிப்பாட்டையும் எவ்வாறு போட்டியிடுதல் ஒத்துழைப்பு என்னும் முறைமைகளில் மக்களுக்கும் மண்ணுக்கும் பயன் உடையதாக மாற்றலாம் என்பதே இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது. யேர்மனிய அதிபர் மேர்ஸ் அவர்களும் சீன அதிபர் ஜி ஜிங்பிங் அவர்களும் “போட்டியிடுதல் ஒத்துழைப்பு இணைந்ததாகவே இன்றைய உலகின் சமுக பொருளாதார அரசியல் வளர்ச்சிகள் தொடரும் எனக்கூறியிருப்பதைக் கவனத்தில் கொண்டு பகைமைகளை வளர்க்காது பகைமை நீக்கமே அரசியல் தலைமைக்கான சிறப்பான வழி என்பதைத் தெரிந்து செயற்பட வெண்டுமென்பதே இலக்கின் எண்ணம்.

**ஆசிரியர்**

 | © 2026 இலக்கு இணையம்




# சுரேஷ் சாலே கைதும் ஈஸ்டர் மர்மங்களின் திறவுகோலாகுமா?

**விதுரன்**

இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் துறையில் ‘அசைக்க முடியாத மூளை’ என்று வர்ணிக்கப்பட்ட மேஜர்ஜெனரல் சுரேஷ் சலே, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த பெப்ரவரி 25 அன்று கைது செய்யப்பட்ட விதம், நாட்டின்அரசியல் மற்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

இது வெறுமனேயொரு தனிநபரின் கைது அல்ல. மாறாக, இலங்கையின் அண்மைய கால அரசியல் மாற்றங்களுக்குப்பின்னால் இருந்ததாகக் கூறப்படும் பாரியதொரு ‘நிழல் இராணுவச் சூழ்ச்சி’யின் திரையை விலக்குவதற்கான முதல் முயற்சியென்று கருதலாம்.

குறித்த தினமன்று கொழும்பு பேலியகொடவில் வைத்து காலை 7.50 மணியளவில் சுரேஷ் சலே மடக்கிப் பிடிக்கப்பட்ட விதம், நீண்ட நாட்கள் கண்காணிக்கப்பட்டு மிகவும் திட்டமிடப்பட்ட நடவடிக்கையாகும் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.




அவர் கைது செய்யப்பட்ட இரண்டு மணி நேரத்திற்குள்ளேயே அவரது இல்லம் சோதனைக்குள்ளாக்கப்பட்டது, அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் தீவிரத்தன்மையைக் காட்டுவதோடு, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 72 மணிநேரத் தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டிருப்பது, சாதாரண விசாரணைக்கும் மேலான தீவிரத்தன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

தற்போது அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம், தரமற்ற நிலக்கரி இறக்குமதி மோசடி மற்றும் எரிவாயுநெருக்கடி போன்ற பொருளாதாரச் சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வரும் சூழலில், இந்த கைது நடவடிக்கை அரசாங்கத்தின்மீதுள்ள அரசியல் அழுத்தத்தைக் குறைப்பதற்கான கருவியாகவும் பார்க்கப்படலாம்.

இருப்பினும், ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளைக் கண்டறிவோம் என்ற ஜனாதிபதியின் தேர்தல்வாக்குறுதிக்கு இதுவொரு முக்கிய நகர்வாகும். ஆனாலும் இந்த நேரத்தில் திடீரென்று சலேயை கைது செய்வதற்கானபின்னணி புரியாத புதிராகவே உள்ளது.

இருப்பினும், அநுரகுமார அரசு ஆட்சிக்கு வந்து கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகள் கழித்தே இந்த கைது இடம்பெற்றிருப்பதுகவனிக்கத்தக்கது. அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார கூறியது போல, ‘சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்கள் திட்டமிட்டுஅழிக்கப்பட்டிருப்பதால்’ புலனாய்வாளர்கள் கடும் நெருக்கடியைச் சந்தித்தனர்.






எனவே, இந்தத் தாமதமானது, மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே போன்ற ஒரு ‘புலனாய்வுத்துறையின் மூளையை’ மடக்குவதற்குத்தேவையான வலுவான ஆதாரங்களைத் திரட்டுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட கால அவகாசமாக இருக்கலாம்.

எவ்வாறாயினும், சுரேஷ் சலே என்பவர் ஒரு சாதாரண இராணுவ அதிகாரி அல்ல. அவர் இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின்தலைவராக இருந்த காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் மிக முக்கிய வெற்றிகளைத்தேடிக்கொடுத்தவர். குறிப்பாக, தமிழீழ விடுதலை புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல்மற்றும் மலேசியாவில் வைத்து கே.பி. (குமரன் பத்மநாதன்) கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டமைபோன்றவற்றில் இவரது பங்களிப்பு முதன்மையானது.

அதேபோன்று இலங்கை இராணுவத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் படைகளுக்கு சாதகமாகமாறுவதற்கு காரணமாக அமைந்த ஆழ ஊடுருவும் அணிகளை கையாளுவதில் வல்லவராக சலே இருந்தார்.

அத்துடன், புலனாய்வுத் தந்திரங்களை வகுப்பதில் ஒரு நிபுணராகக் கருதப்பட்ட சலே கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில், சிவில் அதிகாரிகளைக் கொண்ட அரச புலனாய்வுச் சேவைக்கு தலைவராக நியமிக்கப்பட்ட முதல் இராணுவ அதிகாரியாகவும் இருக்கின்றார்.

குறித்த நியமனம் அப்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆனாலும் ராஜபக்ஷகள் சர்சைகளை விடவும் சலே மீது நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தனர். அதனால் சர்ச்சைகள் பொருட்டாக கொள்ளப்படவில்லை.

இவ்வாறான நிலையில், ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் என்பது வெறும் மத அடிப்படைவாதத் தாக்குதல் மட்டுமல்ல, அது ராஜபக்ஷவினரை மீண்டும் அதிகாரத்திற்குக் கொண்டு வருவதற்கான திட்டமிட்ட ‘அரசியல் சதி’ என்ற குற்றச்சாட்டு சர்வதேச அளவில் சனல் 4 ஆவணப்படம் மூலம் உலகிற்குத் தெரியவந்தது.

பிள்ளையானின் பிரத்தியேக செயலாளராக இருந்த ஆசாத் மௌலானா சுவிட்சர்லாந்தில் தஞ்சமடைந்தன் பின்னர் அவரதுபகிரங்கமான வாக்குமூலங்களும் சாட்சியங்களும் சுரேஷ் சலேவை நோக்கியே இருந்தது.

அந்த அடிப்படையில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வலுவான ஆதாரங்களின் அடிப்படையில் தாக்குதலுக்கான திட்டம்தீட்டியமை, உதவி ஒத்தாசை புரிந்தமை ஆகிய குற்றங்களின் அடிப்படையில் சலே கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ்ஊடகப்பேச்சாளர் எப்.யு.வுட்லர் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார்.

ஒரு தொழில்முறை புலனாய்வாளரான சுரேஷ் சலேயிடமிருந்து உண்மைகளை வெளியே எடுப்பது என்பது நாய் வாலைநிமிர்த்த முயற்சிப்பதற்கு சமமானது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பலம் மற்றும் பலவீனங்களை அங்குலம்அங்குலமாக அறிந்த ஒருவரிடம் விசாரணை நடத்துவது சாதாரண அதிகாரிகளுக்குச் சாத்தியமற்ற காரியம்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஒருமுறை கூறியதைப் போல, சண்டை தவிர்க்க முடியாதது என்றால், முதல் அடியை எதிரியின் முகத்தில் நாமே அடிக்க வேண்டும்’ என்ற தத்துவத்தில் பயிற்றப்பட்வர் தான் சலே.




சலே தனது ‘ஆஸ்தான குருவுக்காக’ செய்த இரகசிய நடவடிக்கைகளை அவர் அத்தனை எளிதில் ஒப்புக்கொள்வார் என்பதுகற்பனைக்கு எட்டாதவொன்றாகும். சிஐடியினரின் கேள்விகளுக்குப் பதில் அளிக்காமல், சட்டத்தின் ஓட்டைகளைப்பயன்படுத்தி மௌனம் காப்பதே இவரது பிரதான பாணியாக இருக்கலாம்.

சுரேஷ் சலே உண்மைகளைக் கூறினாலும், அந்த உண்மைகள் ஒரு கட்டத்திற்கு மேல் ‘இலங்கை’ எனும் நாட்டின்’இறைமையோடு’ ஆழமாகப் பின்னிப் பிணைந்திருக்கும். இந்த உண்மைகள் வெளியே வந்தால், அது

தொடர்ச்சி: பக்கம் 05

# நல்லகண்ணு பெரியார் ஈழத்தமிழருக்காக ஒலித்த குரலில் உறுதியானது..!



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணு அவர்கள் 101, வயதில் 2026, பெப்ரவரி 25ல் அன்று காலமானார்.

அன்னார் 1925, டிசம்பர் 26,ல் ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டத்தில் விவசாயக் குடும்பத்தில் இராமசாமி கருப்பாயி தம்பதி யின் மூன்றாவது மகனாக பிறந்தார்.

1943ஆம் ஆண்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்த நல்லகண்ணு, அதே கட்சியில் 80 ஆண்டு களுக்கும் மேலாக சேவையாற்றியுள்ளார்.

அவர் ஒருதடவை கூறிய கருத்து “என்னுடைய 16 வயதில் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர முயன்றேன். அவர்கள் என்னைச் சேர்க்கவில்லை. ‘18 வயது ஆகட்டும், சேர்த்துக் கொள்கிறோம்’ என்றனர். 18 வயது வந்ததும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இணைந்தேன்” என்றார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவராக துணிச்சலுடன் செயலாற்றியபோது பல்வேறு தடைகள், இடர்கள், கைதுகள் என பல துன்பங்களை எதிர்கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களுடை நம்பிக்கை நட்சத்திரமாகவும். அந்த மக்களுடைய குரலாகவும் செயல்பட்டார்.

அவருடைய இலட்சியமாக “சாதிக் கட்டமைப்பை உடைப்பதும் சுரண்டல் இல்லாத சமுதாயத்தை உருவாக்கு வதுவும்தான் தன்னுடைய இலட்சியமாக இருந்தது” என்றும் அப்போது அவர் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சி இந்திய மத்திய அரசால் தடைசெய்யப்பட்ட போது, தலைமறைவாக இருந்த அவரை கைது செய்து சித்ரவதைகள் செய்தனர். அவர்மீது நெல்லை சதி வழக்குத் தொடுக்கப்பட்டு அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த வழக்கில் ஏழு ஆண்டு காலம் சிறைவாசத்திற்குப் பின்னர் விடுதலையானார்

“ஈழத்தமிழர்கள்” விடுதலை பெறவேண்டும் என பலமேடைகளில் உரையாற்றியதுமல்லாமல் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு ஆதரவாக அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஐதராபாத் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றச் செய்தவர் தியாகி நல்லகண்ணு.



சிறையும், போராட்டங்களும் நிறைந்த வாழ்க்கை இந்திய சுதந்திர போராட்டம், விவசாயிகள் போராட்டம், தீண்டாமைக்கு எதிரான போராட்டம், கனிமவளக் கொள் ளைக்கு எதிரான போராட்டம் எனத் தனது வாழ்நாளில் குறிப்பிட்ட பகுதியை போராட்டம், சிறை வாழ்க்கை என வாழ்ந்தவர் நல்லகண்ணு.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் மட்டுமன்றி இதர

**பா.அரியநேத்திரன்**

கட்சிகளின் தலைவர்களும் ‘தோழர் ஆர்.என்.கே’ என்ற அடைமொழியோடு அவரை அழைக்கின்றனர்.

அவரது நூற்றாண்டு விழாவை சென்னையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் 2025,டிசம்பரில் அக் கட்சியினர் கொண்டாடினர்.

தமிழ்நாட்டுக்கும் தமிழின் வளர்ச்சிக்கும் பாடுபட்ட தாகக் கூறி கடந்த 2022ஆம் ஆண்டு தகைசால் தமிழர் விருதை, முதலமைச்சர் ஸ்டாலின் வழங்கியிருந்தார்.

அதற்காகத் தனக்குக் கொடுக்கப்பட்ட 10 இலட்ச ரூபாய் பரிசுத் தொகையுடன் தன்னுடைய பணமான 5,000 ரூபாயையும் சேர்த்து முதலமைச்சரின் நிவாரண நிதிக்கே நல்லகண்ணு திரும்பி வழங்கினார்.

தன்னுடைய பிறந்தநாளுடன், தான் அங்கம் வகிக்கும் கட்சிக்கும் நூற்றாண்டு என்பதால் அதுகுறித்து நல்லகண்ணு பேசியுள்ளார்.

“நூறாண்டு என்பது அரசியல் கட்சிக்கு ஒரு வயதல்ல. வைரம் பாய்ந்த அனுபவம் செறிந்த ஓர் அமைப்பு இது. ஒடுக்கப்பட்ட, உழைக்கும் மக்களுக்காகத் தொடர்ந்து போராட வேண்டும். வகுப்புவாத அபாயத்தை உணர்ந்து கவனமாகச் செயலாற்ற வேண்டும்” என்றார்.

இப்படியான சமுக மேம்பாட்டு அக்கறை கொண்ட ஈழத்தமிழினம் விடுதலை பெறவேண்டும் என்று உறுதி யுடன் வாழ்ந்த ஒரு தலைவரை உலகத்தமிழினம் இழந்துள்ளது.

## சுரேஷ் சாலே கைதும் ... தொடர்ச்சி...

இலங்கையின்ஒட்டுமொத்த பாதுகாப்பு கட்டமைப் பையுமே சிதைத்துவிடும்.

ராஜபக்ஷக்களை அதிகாரத்திற்குக் கொண்டு வரு வதற்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவே சொந்த நாட்டு மக்கள் மீது குண்டுவீசியது என்பது நிரூபிக்கப்பட்டால், அது சர்வதேச அரங்கில் இலங்கையை ஒரு ‘பயங்கரவாதத் தேசமாக’ அடையாளப்படுத்திவிடும். படைகளுக்கான அபிமானத்தை வெகுவாக இழக்கச் செய்துவிடும் என்பது யதார்த்தமானது.

ஆகவே சலேயிடமிருந்து உண்மைகளை வெளியே எடுத்துவர எந்தவொரு பௌத்த பேரினவாத சக்தியும் விரும்பாது. சுரேஷ்சலேயைக் காப்பாற்ற சிங்கள, பௌத்த இனவாதம் மீண்டும் துடித்தெழும். ‘யுத்த வெற்றி நாயகர்களை அரசாங்கம்பழிவாங்குகிறது’ என்ற கோசம் ஏற்கனவே ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

குறிப்பாக, முன்னாள் அமைச்சர் அலி சப்ரி, பேராசிரியர் ரொஹான் குணரத்ன, பொதுஜனபெரமுன, தவிர்க்க முடியாது ஐக்கியமக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி என்று அனைத்துமே பொதுவெளியில் போர்க்கொடி தூக்கியுள்ளன.

அடுத்து சலேக்கு 90நாட்கள் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்படலாம். அவ்வாறில்லாது நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டால் சட்டத்தின் முன் வாதாட தென்னிலங்கையின் பலம் வாய்ந்த தரப்புகள் வரிசைகட்டி நிற்கும். அதனடிப்படையில் சலேக்கு பிணை அளிகப்பட் டால் அது அரசாங்கத்துக்கு பெருந்தலையிடியாக மாறி விடும்.

அதேநேரம், சலே ஒருவேளை மௌனம் கலைத்து ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் அப்பாவி உயிர்களைப் பறித்த கொடூரச்செயலுக்குப் பின்னால், நாட்டின் பாதுகாப்புத் தலைவர்களே இருந்தனர் என்பது நிரூபிக்கப்பட்டால், அதுவொரு பாரதூரமானஇராணுவச் சூழ்ச்சியாகும்.

1962 மற்றும் 1966 ஆம் ஆண்டு நடந்த தோல்வி யுற்ற இராணுவப் புரட்சிகளைப் போலன்றி, இது ஒரு ‘வெற்றி பெற்ற மறைமுகஇராணுவச் சூழ்ச்சியாக’ வரலாற்றில் பதியப்படும். அதன் தாக்கங்கள் மிகமிக பாரதூரமானவையாகவே இருக்கும். ஆனால்அதற்கான சாத்தியப்பாடுகள் மிகச் சொற்பமானவை.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதி ரான போரில் வெற்றிகளை ஈட்டியவர் என்று மார்பு தட்டிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் தீவிரவாதத்திற்குத் துணை நின்றதாகக் கைது செய்யப்பட்டிருப்பது, இலங்கையின் கடந்த கால மற்றும் எதிர்காலப்பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த பல கேள்விகளை எழுப்புகிறது.

இத்தனை அரசியல் சகதிக்குள்ளும், சட்டத்தின் ஓட்டைகளுக்குள்ளும் சதிராடி, சுரேஷ் சலேயை குற்றவாளி என்று நிரூபிக்கும்வரை இலங்கையின் ‘அரச இயந்திரம் நேர்மையாக செயற்படுமா’ என்பது ட்ரில்லியன் டொலர் கேள்வி தான்.

இத்தனை சிக்கல்களுக்குள்ளும் விசாரணைகள் நேர்மையாகச் செல்கின்றன. அவ்விதமான சூழலில் சலே யின் கைதைமையப்படுத்தி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையோ இனவாதத்தையோ காரணமாக கூற வேண்டாம் என்றுபேராயரில்லம் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அவர்களின் எதிர்பார்ப்புக்கான பதில்....?

• • •

# தாயகக் களத்தைச் சூடாக்கும் சமகால அரசியல் நிகழ்வுகள்

**உயிரோடை தமிழ் வானொலி மற்றும் இலக்கு மின்னிதல் இணைந்து வழங்கிய "தாயக களம்" நிகழ்ச்சியில், அரசியல் ஆய்வாளர் திருமிகு ஜோதிலிங்கம் அவர்களுடன் சமகால தாயக அரசியல் நிலவரங்கள் குறித்து விரிவானகலந்துரையாடல் இடம்பெற்றது.**



**கேள்வி :**

**திருகோணமலை பிரகடனம் மற்றும் கஜேந்திர குமார் தலைமையிலான கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர் மானங்கள் குறித்து உங்கள் கருத்து என்ன?**

**பதில் :**

திருகோணமலை பிரகடனம் கடந்த 14ஆம் திகதி "ஈழத் தமிழர் உரிமைகள் பெருமன்றம்" எனும் அமைப்பி னால் வெளியிடப்பட்டது. அந்த அமைப்பும் அன்றே அறிமுகப்படுத்தப்பட்டது. திருமலை ஆயர் உள்ளிட்ட பல சிவில் தரப்பினரும் இதில் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணத்திலிருந்தும் ஒரு குழு இதில் பங்கேற்றது. சுமார் 20 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கை, தமிழர் வரலாறு மற்றும் அரசியல் உரிமைகள் குறித்து விரிவாக விளக்குகிறது. பல்வேறு விமர்சனங்கள் இருந்தபோதிலும், இது ஒரு சிறந்த ஆவணமாகக் கருதப்பட வேண்டும்.

அறிக்கையின் மையப்புள்ளிகள் இரண்டு: ஒன்று-பொறுப்புக்கூறல் (Accountability); இரண்டு – தமிழர் களுக்கான அரசியல் தீர்வு. பொறுப்புக்கூறல் தொடர்பாக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பதிலாக சர்வதேச தீர்ப்பாயம் ஒன்றின் மூலம் விசாரணை நடத்த வேண்டும் என முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவது எப்படி, எந்த வழிமுறையில் முன்னெடுக்க வேண்டும் என்பதில் தெளிவான திட்டம் முன்வைக்கப்படவில்லை.

அரசியல் தீர்வு தொடர்பாக, "சுயநிர்ணய உரிமை உடைய சமஸ்ட்டி என்ற கோரிக்கையை முன்வைப்பதில் சிலர் கருத்து வேறுபாடு தெரிவிக்கின்றனர்.

கொள்கை ரீதியான அடித்தளத்தை மட்டும் முன்வைக்க வேண்டும். நடைமுறை வடிவமைப்பை இப்போது வழங்க வேண்டாம் என்பதே ஒரு தரப்பின் நிலைப்பாடு. இந்த வேறுபாடுகள் ஒருங்கிணைந்த குரலை பலவீனப்படுத்தும் அபாயம் உள்ளது. எனவே, விவாதித்து ஒருங்கிணைந்த முடிவுக்கு வருவது அவசியம்.

**கேள்வி :**

**திம்பு கோட்பாட்டை மீள உயிர்ப்பிக்கும் முயற்சி மற்றும் ஆய்வுக்குழு அமைப்பு குறித்து விளக்குங்கள்.**

**பதில் :**

நல்லூரில் நடைபெற்ற கூட்டத்தில் மூன்று முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. முதலில், அரசாங்கத்தின் ஐக்கியராஜ்ய யோசனையை முழுமையாக நிராகரித்தனர். இரண்டாவது, தமிழர்களுக்கான அரசியல் தீர்வின் அடிப்படை திம்பு கோட்பாடுகளாக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. மூன்றாவது, இனி எடுக்கப்படும் அரசியல்நிலைப்பாடுகள் ஒரு பொதுச் சபையின் வாயிலாக தீர்மானிக்கப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

திம்பு கோட்பாடு தமிழர்களை ஒரு தேசமாக அங்கீ கரிக்க வேண்டும், அவர்களின் பாரம்பரிய வாழ்விடங்களை ஏற்கவேண்டும், சுயநிர்ணய உரிமையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதைக் கூறுகிறது. இக்கொள்கைகளை மீள ஆய்வு செய்து, தேவையான திருத்தங்களுடன் ஒருங்கிணைக்க நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் நானும் ஒருவனாக இணைக்கப்பட்டுள்ளேன். இந்த முயற்சி நீண்ட காலத்திற்கு பிறகு சிவில் அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் இணைந்து செயல்படும் ஒரு நேர்மையான முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

**கேள்வி :**

**பொதுவாக்கெடுப்பு குறித்து முன்வைக்கப்பட்ட கருத்துகள் என்ன?**

**பதில் :**

பொதுவாக்கெடுப்பு நடத்துவது பற்றி சிலர் முன்மொழிந்தனர். ஆனால் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி "தமிழீழம்" என்ற கோரிக்கையுடன் போட்டியிட்டு மக்களின் தெளிவான ஆணையைப்பெற்றிருந்தது. அதனால் மீண்டும் பொது வாக்கெடுப்பு நடத்துவது அந்த வரலாற்று ஆணையை பலவீனப்படுத்தக்கூடும் என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது.

மேலும், இன அழிப்பு தொடர்பான நீதிக்கான போராட்டம் 2009க்கு பின் வலுப்பெற்றது. ஆனால் 1958, 1977, 1983 போன்ற காலகட்டங்களில் இருந்தே தொடர்ச்சியான ஒடுக்குமுறைகள் இடம்பெற்றுள்ளன. ஆகவே திம்பு கோட்பாடும்1977 மக்களாட்சி ஆணையும் ஒன்றுக்கொன்று முரண் படுவன அல்ல, மாறாக, அவை தமிழர்களின் அரசியல் உரிமைக்கான தொடர்ச்சியான அடித்தளங்களாகவே பார்க் கப்பட வேண்டும்.

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு ஜோதிலிங்கம் வரன் அவர்கள் அளித்த செவ் வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



**கேள்வி :**

**சுவிஸ் தூதரகத்தின் அழைப்பு ஏன் இரத்து செய்யப்பட்டது?**



**பதில் :**

சுவிஸ் தூதரகம் தமிழ் கட்சிகளுக்கிடையே ஒருங்கிணைந்த நிலைப்பாட்டை உருவாக்க முயன்றது. ஆனால் அந்தச் சந்திப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் சிவில் அமைப்புகள் வலுவாக முன் வரக்கூடும் என்ற அச்சத்தால், சுமந்திரன் கலந்து கொள்ளத் தயங்கினார் என நான்கருதுகிறேன்.அவருக்கு ஐக்கியராஜ்ய யோசனையுடன் நெருக்கம் இருப்பதாலும், பிரதான பேச்சாளராகத் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற அரசியல் நோக்க மும்காரணமாக இருக்கலாம்.

இந்த முடிவு தமிழர்களின் சர்வதேச அரசியல் வாய்ப்புகளை பலவீனப்படுத்தியுள்ளது. வெளிநாட்டு தூதர கங்களுடன்ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியமான நேரத்தில் இந்த வாய்ப்பு இழக்கப்பட்டது என்பது வருத்தகர மானது.

**கேள்வி :**

**புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிரான கையெழுத்துப் போராட்டம் குறித்து உங்கள் பார்வை என்ன?**

**பதில் :**

பழைய பயங்கரவாத தடைக் சட்டத்திற்கு சர்வதேச அளவில் கடும் எதிர்ப்பு எழுந்ததால், அதற்கு மாற்றாக மேலும் கடுமையான சட்டம் கொண்டு வர முயற்சி செய்யப்படுகிறது. இது அரசை பாதுகாக்கும் சட்டம் என்ற பெயரில் கொண்டு வரப்பட்டாலும், அடிப்படையில் குடிமக்களின் உரிமைகளை கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது.

தமிழ் மக்களுக்கெதிராக பயன்படுத்தப்பட்ட சட்டமே தற்போது சிங்கள மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத் தக்கூடியதாக மாறியுள்ளது. அதனால் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம் உள்ளிட்ட பல இடங்களில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இது வரவேற்கத்தக்க ஒன்று. ஆனால் தமிழ் மக்களின் எதிர்ப்பும் சிங்கள மக்களின் எதிர்ப்பும் வேறுபட்ட அரசியல் பின்னணியைக் கொண்டவை என்பதை கவனிக்க வேண்டும்.

**கேள்வி :**

**சுமந்திரன்-சிறிதரன் மோதல் தமிழரசுக் கட் சியை பலவீனப்படுத்துகிறதா?**

**பதில் :**

இது வெறும் இரு நபர்களுக்கிடையிலான மோதல் அல்ல. தமிழ் தேசிய அரசியலின் திசை குறித்து உள்ள அடிப்படை முரண்பாடு. சுமந்திரன் கொழும்பு மைய அரசியலை முன்னிறுத்துகிறார். அந்த அணுகுமுறை தமிழ் தேசிய கோரிக்கைகளை ஒதுக்கி வைக்கிறது என்ற குற்றச்சாட்டு எழுகிறது. மறுபுறம், சிறிதரன் தேசிய அடையாளத்தை முன்னிறுத்துகிறார்.

தமிழரசுக் கட்சி வட கிழக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் பழம்பெரும் கட்சி. அது பலவீனமடைவது தமிழ் தேசிய அரசியலையே பலவீனப்படுத்தும். ஆகவே இந்த பிரச்சினை கட்சிக்குள் ஜனநாயக முறையில் தீர்க்கப்பட

தொடர்ச்சி: பக்கம் 15

# பெரும் அழிவுகளையும் இழப்புகளையும் எதிர்கொண்டுவரும் கிழக்கு மாகாணம்!





வடகிழக்கு மாகாணத்தில் கிழக்கு மாகாணம் என்பது என்றைக்கும் இயற்கையின் உறைவிடமாக காணப்படுவதுடன் அங்கு இயற்கையினை மூலதனமாக கொண்டே தமது வாழ்வாதாரத்தினையும் பெருமளவானோர் கொண்டு செல்லும் நிலையில் அந்த இயற்கையே சிலவேளைகளில் வாழ்வாதாரத்திற்கு எதிரியாக மாறும் நிலைமையும் தொடர்ந்து இருந்துவருகின்றது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் அண்மைக்காலமாக பெரும் அழிவுகளையும் இழப்புகளையும் எதிர்கொண்டுவரும் மாகாணமாக இருப்பதுடன் அதிலும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் தொடர்ச்சியான பல்வேறு அழிவுகளையும் இழப்புகளையும் எதிர்கொண்டுவருகின்றது.



இயற்கையின் சீற்றம் ஒரு காரணமாயிருந்தாலும் யானை தாக்குதல்கள் காரணமாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் பெரும் இழப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர். 'வண்டியிலிருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதித்த' கதையாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியான அழிவுகளை மக்கள் எதிர்கொண்டுவருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டுவந்ததே இந்த அழிவுகளுக்கு காரணமாக அமைகின்றதாக பல்வேறு தரப்பினராலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

வெள்ளம், யானைகளின் தாக்கங்கள் என்பது அண்மைக்காலமாக பாரிய அழிவுகளை ஏற்படுத்திவருவதுடன் அவற்றின் மூலம் பல்வேறு இழப்புகளையும் தமிழ் மக்கள் எதிர்நோக்கிவருகின்றனர்.



குளங்களும்நீண்டஆறுகள்,வாவிகள்,நீர்நிலைகள் கொண்ட மட்டக்களப்பு மாவட்டம் தொடர்ச்சியாக வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுவரும் நிலை காணப்படும் அதேநேரம் இன்று யானையின் தாக்கங்கள் காரணமாக மட்டக்களப்பு நகரமும் ஆபத்தின் விளிம்பில் இருக்கும் நிலைமைகள் காணப்படுகின்றன.

இது தொடர்பில் ஆராயும் வகையிலேயே இந்த கட்டுரையினை எழுதுவதற்கான முயற்சியை இந்த வாரம் முன்னெடுத்திருந்தேன்.மட்டக்களப்பு மாவட்டத்தின் இந்த நிலைமையினை ஓரளவுக்காவது மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதை இதனைக்கொண்டு வலியுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

### வெள்ள அனர்த்தம்

மட்டக்களப்பு மாவட்டத்தினைப்பொறுத்த வரையில் வெள்ள அனர்த்தம் என்பது 2020ஆம் ஆண்டுக்கு பிறகு அதிகரித்த நிலைமையில் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்துக்கும் மேற்பட்ட பாரிய நீர்பாசன குளங்களும் 400க்கும் மேற்பட்ட சிறிய குளங்களும் இலங்கையின் மிக நீளமான வாவிகளில் ஒன்றாக கொண்ட வாவியையும் நீளமான ஆறுகளையும் கொண்ட மாவட்டமாகும்.ஆனாலும் மழைகாலங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் இன்று இருந்துவருகின்றது.



கடந்தகாலத்தில் ஆட்சிசெய்தவர்கள் முறையான திட்டமிடல்களைக்கொண்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்காமை இதற்கு பிரதான காரணமாக கூறப்படுகின்றது. அதனைவிட வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் நிலையிலும் முறையான வெள்ளத்தடுப்பு கட்டமைப்புகள் இல்லாமலும் நீர்வெளியேற்ற செயற்பாடுகள் இல்லாமலும் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் அதிகளவில் வெள்ள அர்த்தங்கள் ஏற்படுவற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதாக சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப்பொறுத்த வரையில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதன் பின்னர் கடலினால் அடித்துவரப்பட்டு மட்டக்களப்பு வாவிக்குள் போடப்பட்டுள்ள பாரியளவிலான கட்டிட சிதைவுகள் மற்றும் கழிவுகளினால் மட்டக்களப்பு வாவியானது ஆழம் குறைந்த நிலையில் காணப்படுவதனால் மழைகாலங்களில் இலகுவில் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கான காரணங்களாக இருப்பதுடன் இதன் காரணமாக வயல் நிலங்களும் அதிகளவில் பாதிக்கப்படும் நிலைமைகள் காணப்படுவதாக மீனவர்களினால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றது.

சுனாமிக்கு முன்னர் பாரிய ஆழமான பகுதியாக வாவி காணப்பட்டது.கரையில் நின்றே நாங்கள் மீன்பிடித்தோம்.ஆனால் இன்று வாயின் ஒரு கரையிலிருந்து மற்றக்கரைக்கு நடந்துசெல்லக்கூடிய நிலையிருக்கின்றது. வாவி முழுவதும் கழிவுகளினால் நிரம்பியுள்ளது.அந்த கழிவுகள் அகற்றப்பட்டு வாவி ஆழப்படுத்தப்படுமானால் எதிர்காலத்தில் பாரிய வெள்ளப்பெருக்குகளை தவிர்க்கலாம் என மட்டக்களப்பு வாவியில் நீண்டகாலமாக மீன்பிடியில் ஈடுபடும் மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

இதேபோன்று வடிகால்கள் ஏற்படுத்தப்பட்டு புனரமைக்கப்படாத சிறுகுளங்கள் புனரமைக்கப்படுமானால் வெள்ளத்தினால் விவசாயதுறை பாதிக்கப்படுவது தவிர்க்கப்பட்டு நீண்டகால விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

காலம்காலமாக வரும் அரசுகள் வெறும் வாய்ப்பேச்சுகளில் மட்டுமே செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் தமிழர்கள் பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக தெரியப்படுத்தப்பட்டுவந்தபோதிலும் அவை கவனத்தில் கொள்ளப்படாமல் விடப்படுவதனால் மாவட்டம் இந்த நிலைமைக்கு செல்வதாக சிவில் சமூக செயற்பாட்டாளர்களினால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மட்டு.நகரான்

குறிப்பாக முந்தனையாறு திட்டம் தொடர்பிலும் கித்துள் உறுகாமம் குளங்களை இணைத்து நீர்ப்பாசன திட்டத்தினை உருவாக்குவது குறித்து நீண்டகாலமாக பேசப்படுகின்றபோதிலும் இதுவரையில் யாரும் கவனத்தில் கொள்வதில்லை.இந்த அரசாங்கம் முந்தனையாறு திட்டத்தினை அமுல்படுத்தப்போவதாக கூறுகின்றது ஆனால் அது வெறும்வாய்ப்பேச்சா மட்டுமே இருக்கின்றது.கிபுல் ஓயா திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு காட்டும் அக்கரையில் ஒரு துளியேனும் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் தேவைகுறித்து காட்டப்படுவதில்லையெனவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

### தொடரும் யானைகளின் அச்சுறுத்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் யானைகளில் ஊடுருவல்களும் தாக்குதல்களும் அதிகரித்துவருகின்றது.இதுவரையில் படுவான்கரை பெரு நிலப்பரப்பில் ஊடுருவி சேதங்களை ஏற்படுத்தியுள்ள யானைகள் இன்று மட்டக்களப்பு நகருக்குள் வரும் நிலைமைகள்தோன்றியுள்ளது.யானைகளைகட்டுப்படுத்தநடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தொடர்ச்சியாக மாறிமாறி வரும் அரசுகள் கூறிவந்தாலும் இதுவரையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லையென்பதே உண்மையாகும்.



இந்த கட்டுரை நான் எழுதிக்கொண்டிருக்கும் வெள்ளிக்கிழமை நாளில் இன்று அதிகாலை கொக்கட்டிச்சோலை, முனைக்காட்டு பகுதிக்குள் ஊடுறுவிய யானையினால் பெண் ஒருவர் தாக்கப்பட்டு கொல்லப்பட்டிருந்த நிலையில் இரு பெண்கள் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டு மாத்திரம் யானையின் தாக்குதலினால் ஆறுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதுடன் 10க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதுடன் பெருமளவான வீடுகளும் சொத்துகளும் விவசாய பூமிகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் தினமும் மாலை வேளைகளில் ஆண்கள் வீதிகளில் காவல் செய்யும் நிலைமையே இருந்துவருகின்றது.மட்டக்களப்பு நகருக்கு அருகில் உள்ள மாந்தீவு பகுதிகளில் குடிகொண்டிருக்கின்ற பத்துக்கும் மேற்பட்ட யானைகள் மட்டக்களப்பு நகருக்கும் ஆபத்தாக மாறிவருகின்றது.

தொடர்ச்சி: பக்கம் 08

# காலமும் தேவையும்

தமிழரசி

அனைத்து மக்களும் தமது சொந்த மண்ணில் அக, புறச் சூழலில் சுதந்திரத்துடன் வாழும் நிலையை உருவாக்குவதும் உறுதி செய்வதுமே சுயநிர்ணயம் என கூறப்படுகிறது. அந்த வகையில் நோக்கினால், இந்த நாட்டில் தமிழ் மக்கள் அவ்வாறான ஒரு நந்நிலையை காண்கின்றனரா என்பது பற்றி நாம் சற்று பார்ப்போம்.




தமிழ் மக்கள் எப்போதும் தன்னுரிமை, சுதந்திரம், சுய ஆட்சி என்பவை பற்றி சிந்திக்க கூடாது என்பதில் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசமைப்புகள் மிகவும் முனைப்புடனே செயற்பட்டு வருகின்றன.

அவ்வாறு அவை சிந்திப்பதன் விளைவாகவே பயங்கரவாத தடைச்சட்டம் பல்வேறு வகையில் அமுலாக் கப்படுகிறது. அதிலும் குறிப்பாக தமிழர்களின் விடயத்தில் அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக காரியங்களைச் செய்கிறது.

பயங்கரவாத தடைச்சட்டம் பேராபத்து நிறைந்தது என்றும் ஆட்சிக்கு வந்த பின்னர், அதனை நீக்குவோம் என்றும் கூறிய தற்போதைய என். பி. பி அரசாங்கம், இன்று, நாளை என இழுத்தடித்து அதனை நீக்காமல் இருப்பதுடன் புதிய சட்டமும் வரவுள்ளது. இப்புதிய சட்டமானது, நாட்டைப் பாதுகாப்பதற்காக அல்லாமல், அரசைப் பாதுகாக்கும் கருவியாகவே இருக்கப்போகும் ஒன்றாகும்.

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் இத்தடை சட்டமானது, ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களால் தற்காலிகமானதாக கொண்டு வரப்பட்டு, பின்னர், நிரந்தரமாக உள்ள ஒன்றாகும். இது தமிழர்களை முழுக்க முழுக்க பாதிக்கின்ற, பலி கொள்கின்ற சட்டம்.

நீதியற்ற, சமத்துவமற்ற ஒரு அடக்குமுறைக்கு எதிராக எழுப்பப்பட்ட குரலே, இவ்வாறு ஒரு சட்டத்தின் மூலம் அடக்கி ஆளப்படுகிறது.

யுத்தம் முடிந்த பின்னரும் கூட, தமிழ் மக்கள் தமது எண்ணங்களையோ உணர்வுகளையோ முறையாக வெளிப்படுத்த இயலாதவாறு முகநூல் போன்ற சமூக வலைத்தளப் பதிவுகள் மற்றும் புலனம் போன்றவற்றில் உள்ள குழுக்களில் பகிரும் தகவல்கள் அவதானிக்கப்பட்டு அச்சுறுத்த படுவதும் கைது செய்யப்படுவதும் இன்று வரை தொடர்கின்ற ஒன்று தான். இது ஒரு வகையில் அச்சத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் உத்தி ஆகும். மக்கள் மத்தியில் பய உணர்வை உண்டாக்கி விட்டால், அவர்கள் கேள்வி எழுப்ப மாட்டார்கள் என்கிற எண்ணத்தின் வடிவமே ஆகும்.

வெறுமனே, வீதி புனரமைப்போடும் வீட்டுத் திட்டத் தோடும் நிவாரணங்களோடும் நின்று விட வேண் டும் என்பதற்கான அறைகூவலாகவே இது பார்க்கப்படு கிறது.

தற்போதைய அரசினால் வெளியிடப்பட்டுள்ள PSTA சட்டவரைபானது அரசாங்கத்தை வலுப்படுத்துவதற்கும் அது எச்சந்தர்ப்பத்திலும் அகற்றப்படாமல் இருப்பதற்குமான வலுவான காய்நகர்த்தல் ஆகும். இது ஒரு வகையில் ஜனநாயக பக்கத்தை, இராணுவமயமாக்கும் திட்டத்தின் ஒரு வெளிப்படுத்தலாகும்.

ஒரு நாட்டின் உயர்நீதி மன்றங்கள் கடைப்பிடிக்கும் வழிநடத்தும் கொள்கைகள், கோட்பாடுகள் தான் அந்த நாட்டின் ஒருமைப்பாட்டினையும் ஒற்றுமையையும் நிலைநிறுத்துவதாக அமையும். அதைவிடுத்து நாட்டின் நீதித்துறையும் சட்டத்துறையும் மக்களின் அடிப்படை உரிமைச் சட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றாத விடத்து அது சுயநிர்ணயத்தின் மீது அவர்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தும்.

இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து ஆய்வு செய்து, 1983 இல் அறிக்கை வெளியிட்ட பன்னாட்டு நீதியாளர் குழு ஈழத்தமிழ் மக்களை “இவர்கள் ஒரு மக்கள்” என அடையாளப்படுத்தியிருந்தமை தமிழ் மக்கள் ஒரு இனமாக ஏற்பளிக்கப்பட்டு சுயநிர்ணயம் என்பதற்கு தகுதியுடைய தேசிய இனம் என்பது நிரூபணமாகிறது.

ஆனால் நாம் முற்று முழுதாக சுயநிர்ணயத்துடன் வாழ அனுமதிக்கப்பட்டுள்ளோமா என்றால் அது கேள் விக்குறியான ஒன்றே ஆகும்.

சட்ட அதிகாரங்களை முப்படையினருக்கும் வழங்குவதனூடாக எதை செய்வதற்கு தீர்மானிக்கப்படுகிறது. அதாவது சாதாரண குற்றங்களுடன் தொடர்புடையவர்களும் ஆபத்தான குற்றவாளிகளாக மாற்றப் படலாம் என்கிற எண்ணப்போக்கு மக்கள் மத்தியில் ஏற்படாமல் இல்லை.

எந்த ஒரு அமைப்பையோ, நிறுவனத்தையோ காலவரையறையின்றி தடை செய்வதற்கான வாய்ப்பினை அரச தலைவருக்கு வழங்குவதோடு குறிப்பிட்ட இடங்களை தடைசெய்யப்பட்ட இடமாக பிரகடனப்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அதிகாரமளிப்பதோடு நபர் ஒருவரின் பயணம் பற்றி முடிவுக்கு நீதிமன்றத்திடம் கோரும் உரிமையை காவல்துறைக்கு வழங்குகிறது.



அவசரகால நிலைகளுக்கான சட்டங்களை நிரந்தரமாகப் பிரயோகிக்கும் வகையிலும் மாற்றம் கண்டுள்ளமையானது மனித உரிமை பற்றிய நிலையை கேள்விக்குட்படுத்துவதோடு இலங்கையின் ஒற்றை ஆட்சி முறைமையின் அடிப்படை உரிமை அத்தியாயத்திற்கும் முரணானதாகவே இது காணப் படுகிறது.

நாடு பாதுகாக்கப்படுவதைக் காட்டிலும் அரசு பாதுகாக்கப்படுவதாகவே இதன் சகல பிரிவுகளும் உள்ளன. அதோடு எந்த ஒரு நிலையிலும் அரசாங்கத்தை விமர்சிக்கவோ அல்லது மாற்றவோ இயலாத வகையிலான தூரநோக்காகவும் நாம் இதனை நோக்க முடியும்.

தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்பது சிங்கள ஆளும் தரப்பினரினரால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே காணப்படுகிறது. குறைந்த அதிகாரங்களைக்கொண்ட அதிகார அமைப்பை வழங்குவதற்கு கூட அவர்கள் தயாரில்லை என்பது நாம் கண்கூடாகப் பார்க்கின்ற விடயமே ஆகும். இதுவரை காலமும் தமிழர்களுக்கு நீதி வழங்குவது எவ்வாறு இழுத்தடிக்கப்பட்டு வந்ததோ அதே மனப்போக்கும் அடக்குமுறையுமே இப்போதும் தொடர்கின்றது. தமிழ் மக்கள் ஒன்றிணையவோ, எழுச்சி அடையவோ கூடாது என்பதில் சரியான காய் நகர்த்தல்களை மேற்கொள்ளும் இலங்கை அரசானது, பிளவு படுத்தும் உத்தி மூலம் எமது அரசியல் தலைமைகளை மடைமாற்றியும் விலைபேசியும் மாற்றியுள்ளது.தமிழ் அரசியல் கட்சிகள் தமக்குள் பிளவுபட்டு, பதவிகளுக்காக ஒருவரை ஒருவர் கீழ் தள்ளும் நிலைமையை திட்டமிட்டு உருவாக்கி, ஒருமித்த அரசியல் வேண்டுகை என்கிற ரீதியில் பலவீனப்படுத்தப்பட்டுள்ளனர்.

நாம் தேசிய இனமாக ஏற்கப்பட்டுள்ள நிலையில் எமது ஒருமித்த குரலை மற்றொரு பரிமாணத்தில் அனைத்துலகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய வகையில் பாதைகளை உருவாக்கினாலும் தடைகளும் தடங்கல்களும் இடையிடையே குறுக்கிடாமல் விடவில்லை, இனியும் விடப்போவதும் இல்லை, ஆனால், ஒரு இனமாக நாம் ஒன்றிணைந்து எமக்கான பாதையைத்திறக்க முன்வருவோமாக இருந்தால் நிச்சயம் அது நல்ல பதிலையே தரும். எமது அரசியல் கட்சிகள் சகல விதமான சிந்தனைகளிலும் இருந்து விடுபட்டு எமது மாவீரர்களின் புனித ஆகுதியை, தியாகத்தை நினைத்து பார்த்தால் எமது விடியல் சாத்தியமாகிவிடும்.

• • •

## பெரும் அழிவுகளையும் ... தொடர்ச்சி...

அம்பாறை மாவட்டத்தில் உள்ள காட்டுப்பகுதிகளில் உள்ள யானைகளே இவ்வாறு வந்து சேதங்களை ஏற்படுத்திவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.இதற்கான காரணம் மட்டக்களப்பின் எல்லைப்பகுதிகளில் உள்ள காடுகள் அழிக்கப்பட்டுள்ளதனால் அங்குவரும் யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கிவருவதாக தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் யானையின் வருகையினை கட்டுப்படுத்துவதற்கு முறையான யானை வேலிகள் அமைக் கப்படவேண்டும் என்ற தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுவருகின்றபோதிலும் மாறிமாறி வரும் அரசுகள் அது தொடர்பில் முறையான கவனம் செலுத்தாமை யானையின் ஊடுருவலுக்குக் காரணமாக அமைவதாக பிரதேச அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

“ஒரு வருடத்திற்கு முன்பு சுற்றாடல் அமைச்சர் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தபோது பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தார். ஆனால் ஒரு வருடம் கடந்தும் அதே பிரச்சினைகள் குறித்து மீண்டும் பேச வேண்டிய நிலை உருவாகியுள்ளது.இந்த மோதலுக்கான முக்கியகாரணங்களில்ஒன்றுமகாவலிஅதிகாரசபையினால் முன்னெடுக்கப்படும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக காடுகள் அழிக்கப்பட்டு வருவதுதான். இதன் விளைவாக காடுகளில் வாழும் யானைகள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் நிலை அதிகரித்துள்ளது. மகாவலி திட்டத்தின் மூலம் தண்ணீர் வருகிறதா இல்லையா என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், யானைகள் வருவது மட்டும் நிச்சயம். சமீபத்தில் வாழைச்சேனையில் ஏற்பட்ட சம்பவம் இதற்கு சான்றாகும்”எனவும் தெரிவிக்கின்றனர்.

### தீர்வு

இந்த பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வுகள் காணப் படவேண்டுமானால் மக்களின் கருத்துகளும் இந்த பிரச்சினைகளில் பாதிக்கப்படும் மக்களின் கருத்துகளும் விவசாய சமூகங்களின் கருத்துகளும் துறைசார் நிபுணர்களின் கருத்துகளும் உள்வாங்கப்பட்டு முறையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்படவேண்டும். வெறுமனே திட்டங்கள் முன்னெடுக்கின்றோம் நடைமுறைப் படுத்துகின்றோம் என்ற போக்கில் கொண்டுவரும் நிதியை செலவிட மட்டும் திட்டங்கள் கொண்டுவரப்படுமானால் இதற்கான தீர்வினை வழங்கமுடியாது.

எவ்வாறாயினும்இந்த நாட்டில் உள்ள சிங்கள அரசுகள் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கருத்தில்கொண்டு செயற்படுமா என்ற சந்தேகங்களும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கின்றது. சர்வதேச ரீதியான நிதி அமைப்புகள் தன்னார்வ அமைப்புகள் இது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும்.இதனை தடுப்பதற்கான வழிவகைகளை முன்னெடுத்து இந்த மாவட்டத்தின் துன்ப நிலையினை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்பதே அனைவரது வேண்டுகோளாகவும் இருக்கின்றது.

## வெளியக தலையீட்டை ... தொடர்ச்சி...

வருவதாகவும், பயங்கரவாதத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் சட்டமூலத்தின் ஆரம்ப வரைவு குறித்து பொது மக்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இறுதியில் இரத்து செய்வதற்கு வழிவகுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.


கூட்டு மற்றும் பரஸ்பர மரியாதையுடன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, உயர் ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் பரந்த சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்ற இலங்கை தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61ஆவது கூட்டத்தொடர் கடந்த 23ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள நிலையில், அதன் ஒரு அங்கமாக இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்த விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறுகிறது

இம்முறை கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கைகளோ அல்லது விவாதங்களோ இடம்பெறாத நிலையில், பிரான்ஸைத் தளமாகக் கொண்டியங்கும் ‘Jeunesse Etudiante Tamoule’ எனும் அரச சார்பற்ற அமைப்பினால் இந்த கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற 60ஆவது கூட்டத் தொடரின்போது, ‘இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்’ எனும் தீர்மானம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானிய துணைப்பிரதமர் சந்திப்பில் மூன்று தமிழ் கட்சிகளின் ஐந்து முகங்கள்!



பா.அரியநேத்திரன்

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த பிரித்தானிய துணைப் பிரதமர் டேவிட் லாமி, (David Lammy) அவர்களை மூன்று தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளை சேர்ந்த ஐந்து முகங்கள் சந்தித்திருந்தனர். பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன், இரா சாணக்கியன் மற்றும் பதில் தமிழரசுக்கட்சி செயலாளர் எம் ஏ சுமந்திரன் ஆகிய ஐவரும் கடந்த 2026 பெப்ரவரி 17ல் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்த சந்திப்பின்போது இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆண்ட்றூ பற்றிக் ( Andrew Patrick} உடனிருந்தார்.

கலந்துரையாடலின் போது வழமையான வாய்பாடுகளான நல்லிணக்கம்,சர்வதேச நீதியியல் மற்றும் தமிழர்



சமூகங்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான பிரச்சினைகள் குறித்தும் இலங்கையில் நிலையான நல்லிணக்கமும், சமூக நீதி நடைமுறைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டிய அவசியம் குறித்து இருதரப்பினரும் கருத்து பரிமாறிக் கொண்டதாக தமிழர் தரப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு துணை பிரதமர் தமிழர் பிரதிநிதிகளின் குரல்கள் தொடர்ந்து கேட்கப்படுவதை உறுதிப்படுத்துவதிலும், நீதி மற்றும் சமத்துவத்தை முன்னிறுத்துவதிலும், அர்த்தமுள்ள முன்னேற்றத்துக்கு ஆதரவு வழங்குவதிலும் ஐக்கிய இராச்சியம் உறுதியாக இருப்பதாக பிரிட்டன் துணை பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில் மூன்று தமிழ்தேசிய கட்சிகளை சேர்ந்த ஐவர் கலந்துகொண்டனர். தமிழரசுக்கட்சி சார்பாக பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சாணக்கியன், பதில் செயலாளர் சுமந்திரன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், ரெலோ கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் நான்கு பேர் கோட், ரை கட்டிய சீருடையிலும், ஒருவர் வேட்டி சேட்டுடனும் கலந்துகொண்டதை ஊடகப் பரப்பில் வந்த படங்களில் காணமுடிந்தது.

அவர்களுடைய சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ் தேசிய கட்சிகளின் வரலாற்றையும் நன்கு தெரிந்துள்ள பிரித்தானிய துணைப் பிரதமர் ஏன் நீங்கள் சிறுபான்மையினர் மூன்று கட்சிகளாக வந்துள்ளீர்கள் ஒரு கட்சியாக வரமுடியாதா? என்ற வினாவை கேட்டதாகவும் அதற்கு அவரை சமாளிக்கும் பாணியில் தமிழரசுக்கட்சி தற்காலிக செயலாளர் "நாங்கள் மூன்று கட்சிகளாக வந்திருந்தாலும் எங்கள் கருத்து நிலைப்பாட்டில் நாங்கள் உங்களுக்கு எடுத்துரைக்கும் விடயங்களில் எங்களுக்கு எந்த முரண்பாடுகளும் இல்லை, வெவ்வேறு கட்சிகளாக தமிழ்மக்களின் பிரச்சனையில் ஒன்றுபட்டு நிற்கிறோம். அதுதான் உண்மையான ஜனநாயகத்தின் உச்ச விழுமியம்" என தமிழரசுக்கட்சி பதில் பொதுச்செயலாளர் பதில் அளித்தார் என ஒரு சமூக வலைத்தளப் பத்திரிகையில் குறிப்பிட்டிருந்ததை அறிய முடிந்தது.

நல்லவேளை பிரித்தானிய துணைப்பிரதமர் மாறி இப்படிக்கேட்கவில்லை "உங்கள் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சிக்குள் இரண்டு அணி உள்ளதே அதுவும் ஜன நாயகத்தின் உச்சமா" இப்படி கேட்டிருந்தால் சங்கடமாக இருக்கும் என்பதை அவர் தவிர்த்திருக்கலாம்.

இந்த சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தற்போதைய அநுர அரசு புதிய அரசியல் யாப்பை அறவே கொண்டு வர மாட்டார்கள் என துணைப்பிரதமரிடம் கூறியதாக அந்த சந்திப்பில் கலந்து கொண்ட தமிழரசு கட்சி பிரமுகர்கள் சிலர் தவறான செய்தியை பரப்புவதாகவும் தாம் அப்படி கூறவில்லை அநுரா அரசு புதிய அரசியல் யாப்பு திருத்தத்திற்கான முயற்சிகளை எடுத்து வருகிறது அதில் நல்லாட்சி காலத்தில் திணிக்கப்பட்ட "ஏக்கியராச்சிய" அரசியலைப்பை மீளவும் அமுல்படுத்த முயல்கிறார்கள் அதனை தடுக்கவே நாம் போராடுகிறோம். இதனை பலதடவை கூறியுள்ளதாகவும் வேண்டுமென தான் கூறாதவற்றை கூறிவருகிறார்கள் இது அப்பட்டமான பொய் என கஜேந்திரகுமார் ஊடகங்களில் தெரிவித்திருந்தார் என்பதை காணமுடிந்தது.

தமிழ்தேசியகட்சிகளை பொறுத்தவரை வெளிநாட்டு இராஜதந்திரிகள் உடனான சந்திப்பில் நல்ல பிள்ளைக்கும், தாம் ஒற்றுமையானவர்கள் என நடித்தாலும் இராஜதந்திரிகள் பெரும்பாலானவர்களுக்கு தமிழ்தேசிய கட்சிகள் ஒற்றுமை இல்லை என்ற உண்மையை அவர்கள் அறிந்து வைத்துள்ளனர். அதனால்தான் பிரித்தானிய துணைப் பிரதமர் டேவிட் லாமி, தமிழ்தேசிய கட்சி தலைவர்களிடம் நீங்கள் ஏன் ஒரு கட்சியாக செயல்பட முடியாது என்ற கேள்வியை முகத்தில் அறைந்தது போல் கேட்டார் என்பதை புரிய முடிகிறது.

இதைவிட பிரித்தானிய தூதரகம் தமது துணை பிரதமர் சந்திப்பு தொடர்பாக மிக முக்கியமான கட்டுப்பாட்டை நிபந்தனையை தமிழ்தேசிய கட்சி தலைவர்களிடம் முன்கூட்டியே தெரிவித்திருந்தது துணை பிரதமருடன் சந்தித்து பேசிய விடயங்களை நீங்கள் எவரும் ஊடகங்களில் வெளியிடக்கூடாது அந்த சந்திப்பு பற்றி நாமே உத்தியோகபூர்வமாக ஊடகங்களுக்கு கூறுவோம். இவ்வாறு சந்திக்கச் சென்ற தமிழ்தேசிய கட்சி பிரமுகர்களுக்கு முன்கூட்டியே இந்த நிபந்தனையை மூன்று கட்சிகளும் தெரிவித்திருந்த தாகவும் அதனால் கலந்து கொண்ட தமிழ்தேசிய கட்சிகளின் பிரமுகர்கள் எவரும் சந்திப்பு பற்றி ஊடகங்களில் பெரிதாக அலட்டவில்லை. தமிழ் தேசிய கட்சிகளின் போக்குகளை பிரித்தானிய தூதரகம் நல்ல முறையில் கணக்குப் போட்டுள்ளது என்பதை இலகுவாக புரியலாம்.

தமிழ் தேசிய பிரமுகர்களிடம் துணை பிரதமர் கூறிய பதில் " தமிழர் பிரதிநிதிகளின் குரல்கள் தொடர்ந்து கேட்கப்படுவதை உறுதிப்படுத்துவதிலும், நீதி மற்றும் சமத்துவத்தை முன்னிறுத்துவதிலும், அர்த்தமுள்ள முன்னேற்றத்துக்கு ஆதரவு வழங்குவதிலும் ஐக்கிய இராச்சியம் உறுதியாக இருப்பதாக தெரிவித்தார்".

அப்படியானால் 1948 பெப்ரவரி 04 ல் இதே பிரித்தானியா தான் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கி ஈழத் தமிழர்களுக்கு கை விலங்கை இட்டுச்சென்றது. துணை பிரதமர் கூறியபடி 78 வருடங்களாக நீதி, சமத்துவம், சுதந்திரம், மறுக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பி எதனை சாதித்தீர்கள்? மாறி மாறி ஆட்சி பீடம் ஏறிய இலங்கை ஆட்சியாளர்களுக்கே சாதகமாக செயற்பட்டார்கள். என்பதுதான் உண்மை. இதனை சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்தேசிய கட்சிகளின் பிரமுகர்கள் சுட்டிக்காட்டி இருக்க வேண்டும் அவர்கள் இராஜதந்திர சந்திப்புக்களில் இதனை கூறுவது தவறாக இருந்தாலும் உண்மைகளையும் வரலாறுகளையும் பிரித்தானிய நாடும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இந்த சந்திப்பும் இலங்கை அரசுக்கு அபிவிருத்தி தொடர்பாக உதவ வரும் நாடுகள் இவ்வாறு தமிழ் தரப்பையும் சுகம் விசாரித்துப்போவதைப் போன்ற ஒரு கலந்துரையாடல் மட்டுமே. இந்த சந்திப்பால் எந்த உத்தரவாதமும், எந்த நன்மையும் தமிழ் மக்களுக்கு இல்லை வழமைபோன்று செய்தியும் படமும் மட்டுமே.

• • •

# மலையகத்தில் மதுவின் ஆதிக்கம்:

# வாழ்வாதாரத்தை விழுங்கும் சமூகப் பேரழிவு



இலங்கையின் பொருளாதாரத்தின் தூண்களாக திகழும் மலையக பெருந்தோட்டச் சமூகம், கடந்த 203 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தனது வாழ்வை நகர்த்தி வருகிறது. கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி என அடிப்படைத் தேவைகளிலேயே இச்சமூகம் பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில், மதுபானப் பயன்பாடு என்பது அச்சமூகத்தின் எதிர்காலத்தை அச்சுறுத்தும் ஒரு பெரும் நச்சாக தொடர்கிறது. அண்மையில் "அஸ்வெசும" நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படும் நாட்களில் மலையகத்தில் மதுபான விற்பனை அதிகரிப்பதாக வெளியாகியுள்ள செய்திகள், இச்சமூகத்தின் வறுமை மற்றும் உளவியல் சிக்கல்களின் நிலையை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

மலையகத்தில் மதுவின் ஆதிக்கம் என்பது தற்செயலானது அல்ல. இது காலனித்துவ ஆட்சியாளர்களால் திட்டமிட்டு விதைக்கப்பட்ட ஒரு போக்காகும். 19-ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட தொழிலாளர்கள், அடர்ந்த காடுகளைத் துப்புரவு செய்து தேயிலை பயிரிடும் கடினமான பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களின் உடல் சோர்வை மறக்கவும், குளிரைத் தாங்கிக்கொள்ளவும் மது ஒரு 'மருந்தாக' அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சொற்ப ஊதியம் மீண்டும் முதலாளிகளிடமே சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், தோட்டங்களுக்கு அருகிலேயே மதுபானக் கடைகள் திறக்க அனுமதிக்கப்பட்டன.

### மதுபான சாலைகளின் அடர்த்தி

இலங்கையின் ஏனைய மாவட்டங்களை விடவும், நுவரெலியா போன்ற மலையக மாவட்டங்களில் மதுபான சாலைகளின் அடர்த்தி மிக அதிகமாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகைக்கு இத்தனை மதுபான சாலைகள் என்ற நியதியை மீறி, இங்கு ஒவ்வொரு சந்திகளிலும் மதுக்கடைகள் காணப்படுகின்றன.




மதுவரித் திணைக்களத்தின் தரவுகளின்படி, மக்கள் தொகை விகிதாசாரத்துடன் ஒப்பிடும்போது நுவரெலியா மாவட்டத்தில் மதுபானசாலைகளின் எண்ணிக்கை அதிர்ச்சியளிக்கும் வகையில் உள்ளது. குறிப்பாக நாட்டின் ஏனைய பின்தங்கிய அல்லது விவசாய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது நுவரெலியாவில் மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும். உதாரணமாக, நுவரெலியா மாவட்டத்தில் உள்ள மதுபானசாலைகளின் எண்ணிக்கை, வட மாகாணத்தின் சில மாவட்டங்களின் மொத்த எண்ணிக்கையை விடவும் அதிகமாகக் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

ஏனைய சாதாரண மாவட்டங்களில் சுமார் 15,000 - 20,000 மக்களுக்கு ஒரு மதுபானசாலை என்ற விகிதம் இருந்தால், மலையகத்தின் சில பகுதிகளில் குறிப்பாக தேயிலைத் தோட்டங்களை அண்டிய சிறு நகரங்களில் 2,000 - 5,000 மக்களுக்கு ஒரு மதுபானசாலை என்ற விகிதத்தில் காணப்படுகிறது. நுவரெலியா மாநகர சபைக்கு உட்பட்ட மிகச்சிறிய பரப்பளவிற்குள் மாத்திரம் 40-க்கும் மேற்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன. இது நாட்டின் ஏனைய நகரங்களுடன் ஒப்பிடுகையில் மிக உயர்ந்த அடர்த்தியாகும்.

சுற்றுலாத் துறையை ஒரு காரணமாகக் கூறினாலும், இதன் நேரடிப் பாதிப்பு உள்ளூர் தோட்டத் தொழிலாளர்களையே சென்றடைகிறது. கடந்த காலங்களில் அரசியல் தேவைகளுக்காகவும், தேர்தல்களை இலக்கு வைத்தும் பெருமளவிலான மதுபான உரிமங்கள் மலையகப் பகுதிகளில் வழங்கப்பட்டன. கடந்த தேர்தல்களின் போது மலையக அரசியல் தலைவர்களின் சிபாரிசின் பேரில், பல புதிய மதுபானசாலைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.



குறிப்பாக, அம்பகமுவ மற்றும் நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுகளில் இக்காலப்பகுதியில் கணிசமான உரிமங்கள் வழங்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசியல்வாதிகளுக்கு நெருக்கமானவர்கள் மற்றும் உள்ளூர் செல்வாக்கு மிக்கவர்களுக்கு மதுபான உரிமங்கள் வழங்கப்பட்டதன் மூலம், கிராமப்புற மற்றும் நகரப்பகுதிகளில் மதுவின் ஊடுருவல் எளிதாக்கப்பட்டது. குறிப்பாக 2023ஆம் ஆண்டு இறுதி காலாண்டு பகுதியில் அப்போதைய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக வெளியிட்ட தரவுகளின்படி, இலங்கையில் 4,570 அனுமதி பெற்ற மதுபானசாலைகள் உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அவற்றில் கொழும்பு மாவட்டத்தில் அதிகளவு மதுபானசாலைகள் காணப்படுவதுடன், மொத்த எண்ணிக்கை 849 ஆகும். மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மதுபானசாலைகளைக் கொண்ட மாவட்டம் கிளிநொச்சி மாவட்டமாகும், அந்த மாவட்டத்தில் 6 மதுபானசாலைகளே உள்ளதாக அப்போது அரசாங்கம் தகவல் வெளியிட்டது. இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் 684 மதுபானசாலைகளும், காலி மாவட்டத்தில் 359மதுபானசாலைகளும், கண்டி மாவட்டத்தில் 307 மதுபானசாலைகளும், நுவரெலியா மாவட்டத்தில் 248 மதுபானசாலைகளும், மாத்தறை மாவட்டத்தில் 207 மதுபானசாலைகளும் பதுளை மாவட்டத்தில் 197 மதுபானசாலைகளும், களுத்துறை மாவட்டத்தில் 185 மதுபானசாலைகளும், குருநாகல் மாவட்டத்தில் 175 மதுபானசாலைகளும், அனுராதபுரம் மாவட்டத்தில் 155 மதுபானசாலைகளும், புத்தளம் மாவட்டத்தில் 152 மதுபானசாலைகளும், மாத்தளை மாவட்டத்தில் 148 மதுபானசாலைகளும், இரத்தினபுரி மாவட்டத்தில் 135 மதுபானசாலைகளும் கேகாலை மாவட்டத்தில் 118 மதுபானசாலைகளும் மொனராகலை மாவட்டத்தில் 113 மதுபானசாலைகளும் உள்ளதாக அறிவிக்கப்பட்டது.



அதேநேரம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 85 மதுபான சாலைகளும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 85 மதுபானசாலைகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 77 மதுபான

மருதன் ராம்

சாலைகளும், அம்பாறை மாவட்டத்தில் 72 மதுபானசாலைகளும், திருகோணமலை மாவட்டத்தில் 64 மதுபானசாலைகளும், வவுனியா மாவட்டத்தில் 30 மதுபானசாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 13 மதுபானசாலைகளும் உள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 மதுபானசாலைகள் உரிமத்துடன் இயங்கி வருவதாக அப்போதைய நிதியமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 200 மதுபானசாலை அனுமதி பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டதாக தகவல்கள் உள்ளன.

அவற்றில் கொழும்பு மாவட்டத்தை தவிர மலையகப் பகுதிகளுக்கு பெரும்பாலான அனுமதி பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் அரசாங்கம் வறுமையை ஒழிப்பதற்காகவும், குறைந்த வருமானம் பெறுவோருக்குப் பாதுகாப்பாகவும் வழங்கத் தொடங்கிய 'அஸ்வெசும' கொடுப்பனவு, இன்று மதுபானசாலை உரிமையாளர்களுக்கு லாபமீட்டும் ஒரு கருவியாக மாறியிருப்பதாக தகவல் வெளியாகின்றமை வேதனைக்குரிய விடயமாகும். உத்தியோகபூர்வ தரவுகள் இன்றி இந்த தகவல் வெளியாகியுள்ள போதிலும் அதன் உண்மை தன்மை என்பது கள யதார்த்தத்தின் ஊடாக தெளிவாகின்றது. "அஸ்வெசும கொடுப்பனவு வழங்கப்படும் நாட்களில் எமது விற்பனை இருமடங்காகிறது. வாடிக்கையாளர்கள் எங்கிருந்து பணம் கொண்டு வருகிறார்கள் என்பது எங்களுக்கு முக்கியமல்ல." என்று ஒரு மதுபானசாலை உரிமையாளரை கோடிட்டு காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று செய்து வெளியிட்டுள்ளது.




வறுமையில் வாடும் குடும்பங்கள், தமக்குக் கிடைக்கும் சிறிய தொகையை எவ்வாறு முன்னுரிமைப்படுத்திச் செலவிடுவது என்பது குறித்த விழிப்புணர்வு அற்ற நிலையில் உள்ளனர் என்பதை இந்த செய்தி எடுத்துக்காட்டுகிறது. தீராத கடன் சுமை மற்றும் வறுமையினால் ஏற்படும் விரக்தியை மறக்க மதுவை ஒரு வடிகாலாக மலையகத்தில் உள்ள சிலர் பயன்படுத்துகின்றனர்.

மறுபுறம் நண்பர்களுடன் இணைந்து மது அருந்துவது ஒரு கௌரவமான அல்லது பொழுதுபோக்குச் செயலாக அங்கீகரிக்கப்படும் தவறான சமூகக் கட்டமைப்பு உருவாகியுள்ளது. மலையகத்தில் மதுவினால் பொருளாதாரப் பாதிப்புகள், சமூக மற்றும் குடும்பப் பாதிப்புகள், சுகாதாரப் பாதிப்புகள் போன்றன ஏற்படுகின்றன.

மலையகத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியம் மிகக் குறைவு. இதில் பெரும் பகுதி மதுவுக்காகச் செலவிடப்படும் போது குடும்பத்தவர்களின் போஷாக்கு நிலை குறைகின்றதாக தெரிவித்து பல தொண்டு நிறுவனங்கள் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

அதிக வட்டிக்குக் கடன் வாங்கும் சூழல் உருவாகி, குடும்பம் தீராத கடன் சுழலில் சிக்கிக்கொள்கிறது. குறிப்பாக நுண்நிதி கடன் போன்ற மீள முடியாத வலைக்குள் மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் சிக்கிக் கொள்ள


தொடர்ச்சி: பக்கம் 12

# ஈழ விடுதலைப் போராட்டத்தில் தியாகச்செம்மல் நல்லகண்ணுவின் சமரசமற்ற அறப்போர்



## தேசிய இனச் சிக்கலும் மார்க்சியப்பார்வையும்

தமிழக அரசியலில் நேர்மைக்கும் மார்க்சியக் கோட்பாட்டுஉறுதிக்கும் இலக்கணமாகத் திகழ்ந்த நல்ல கண்ணு அவர்கள், ஈழப் போராட்டத்தை ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின்'சுயநிர்ணய உரிமை' (Self-determination) என்ற தத்துவார்த்தத் தளத்திலேயே அணுகினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொறுப்புகளில் இருந்த காலங்களிலும், அதற்குப் பின்னரும், ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமைக்காக அவர் ஆற்றியபணிகள் அரசியல் மற்றும் மனிதாபிமானத் தளங்களில்ஆழமான தடம் பதித்துள்ளன.



1983-ஆம் ஆண்டு இலங்கையில் நிகழ்த்தப்பட்ட 'கறுப்பு ஜூலை' இனப்படுகொலையைத் திட்டமிட்டு நடத்தப்பட்ட 'அரச பயங்கரவாதம்' என்று முதன் முதலில் அடையாளப்படுத்திய தலைவர்களில் அமரர் நல்ல கண்ணு முக்கியமானவர். இச்சம்பவத்தைக் கண்டித்து தமிழகம் முழுவதும் மாபெரும் கண்டனப் பேரணிகளை ஒருங்கிணைத்த அவர், இலங்கை அரசுடனான தூதரக உறவுகளை இந்தியா துண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஊடகங்கள் வாயிலாக ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப் புகைப்படங்களோடும், நேரடிச் சாட்சியங்களோடும் வெளியிட்டு, ஈழப் பிரச்சனை யைச் சர்வதேச இடதுசாரித் தளத்திற்குக் கொண்டு சென்றார்.

1987-ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை (IPKF) ஈழத்திற்கு அனுப்பப்பட்ட சூழலில், நல்லகண்ணு அவர்களின் நிலைப்பாடு மிகத் தார்மீகமானது. அமைதி ஏற்படுத்தச் சென்ற படை, தமிழ்மக்கள் மீதும் போராட்ட அமைப்புகள் மீதும் தாக்குதல் நடத்தியபோது அதனை அவர் வன்மையாகக் கண்டித்தார். "அமைதி நிலைநாட்டச் சென்ற படை, மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கக் கூடாது" என்று எச்சரித்த அவர், இந்திய அரசு தனது வெளியுறவுக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும், துப்பாக்கி முனையில் திணிக்கப்படும் தீர்வை விட ஜனநாயக ரீதியிலான தன்னுரிமையே சிறந்தது என்றும் வாதிட்டார்.



ஈழப் போராட்ட வரலாற்றின் மிக இருண்ட காலமான 2009-ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் போரின் போது, நல்லகண்ணு அவர்களின் செயல்பாடுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. 80 வயதைக் கடந்த நிலையிலும், சென்னையில் நடைபெற்ற தொடர் உண்ணாவிரதப் போராட்டங்கள் மற்றும் மனிதச் சங்கிலிப் போராட்டங்களில் அவர் முன்னின்றார். மத்திய அரசு இலங்கைக்கு வழங்கும் இராணுவ உதவிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரிச் சென்னை கோட்டை நோக்கிய பேரணிகளை வழிநடத்தினார். போரின் இறுதிக்கட்டத்தில் அப்பாவி மக்கள் கொத்துக் கொத்தாகக்கொல்லப்பட்டதை 'வரலாற்றுக் கறை' என்று வர்ணித்த அவர், போர்க்குற்றங்கள் குறித்துச் சர்வதேச விசாரணைநடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையைச் சமரசமின்றிவலியுறுத்தி வந்தார்.

அரசியல் போராட்டங்களுக்கு அப்பால், ஈழத் தமிழ் அகதிகளின் துயர் துடைப்பதில் நல்லகண்ணு அவர்கள் காட்டிய ஈடுபாடு ஈடு இணையற்றது. தமிழகத்தில் உள்ள மண்டபம், கும்மிடிப்பூண்டி, திருச்சி உள்ளிட்ட பல்வேறு அகதிமுகாம்களுக்கு அவர் பலமுறை நேரில் சென்று ஆய்வு செய்துள்ளார். முகாம்களில் மக்கள் தார்ப்பாய் கொட்டகைகளில் வசிப்பதையும், அடிப்படைச் சுகாதார வசதிகள் இன்றித் தவிப்பதையும் கண்டு வருந்தியஅவர், தமிழக அரசுக்கு விரிவான அறிக்கைகளைச் சமர்ப்பித்து மாற்றங்களைக் கொண்டு வரப் பாடுபட்டார். "முகாம்களில் இருப்பவர்கள் நம் ரத்தம், அவர்களைக் கைதிகளைப் போல

தொடர்ச்சி: பக்கம் 12

# இந்திய ஏஜ மாநாடு :
## அடிப்படை மாற்றம் இல்லாமல் மாநாடு மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்த முடியாது




**ஆதி:** சட்டவாளர் -தமிழ் நாடு

இந்தியாவில் நடைபெற்ற ஏஜ மாநாடு ஒரு தொழில்நுட்ப நிகழ்வாக மட்டுமே புரிந்துகொள்ள முடியாதது. அது இந்தியாவின் வரலாற்று பொருளாதார பாதை, தற்போதைய அரசியல் சிந்தனை, மற்றும் எதிர்கால தொழில்நுட்ப திசை ஆகியவற்றை ஒரே நேரத்தில் வெளிச்சமிட்டுக் காட்டிய நிகழ்வாகும். வெளிப்படையாக இது “டிஜிட்டல் முன்னேற்றம்”, “உலக தொழில்நுட்ப தலைமை”, “ஏஜ சக்தி” போன்ற மொழிகளில் விவரிக்கப்பட்டாலும், அதன் அடிப்படையில் இருக்கும் கட்டமைப்பு முரண்பாடுகள் கவனிக்கப்பட வேண்டியவை.

சுதந்திரத்திற்கு முந்தைய காலனித்துவ கட்டத்தில் உருவான பொருளாதார சார்பு அமைப்பு, அரசியல் சுதந்திரத்திற்குப்பிறகும்முழுமையாகஉடைக்கப்படவில்லை. தொழில்துறை வளர்ச்சி, அறிவியல் முன்னேற்றம், உலக சந்தை இணைப்பு—இவை அனைத்தும் பெரும்பாலும் அந்நிய மூலதனம், வெளிநாட்டு தொழில்நுட்ப உரிமைகள், மற்றும் உலக நிதி அமைப்புகளின் கட்டமைப்புக்குள் தான் வளர்ந்தன. இதனால் இந்திய மூலதனம் தனித்த சுயாதீன சக்தியாக அல்லாமல், உலகளாவிய மூலதன ஒழுங்கின் துணை அமைப்பாகவே செயல்பட்டது.

இந்த பின்னணியில், ஏஜ மாநாடு இந்தியாவின் தொழில்நுட்ப இறையாண்மையை உறுதி செய்யும் முயற்சியாக அல்லாமல், பன்னாட்டு தொழில்நுட்ப இணைப்பை மேலும் ஆழப்படுத்தும் மேடையாகவே தோன்றுகிறது. கணினி திறன், கிளவுட் கட்டமைப்பு, அடிப்படை ஏஜ மாடல்கள், செமி கன்டக்கர் உற்பத்தி போன்ற முக்கிய துறைகள் இன்னும் வெளிநாட்டு கட்டுப்பாட்டில் உள்ளன. இந்தியா வழங்குவது தரவு, திறமையான ஆனால் மலிவு மனிதவளம், மற்றும் விரிவான சந்தை. இவ்வகை வளர்ச்சி சார்பை உடைக்காது; அது அதை நவீன வடிவில் மறுபடியும் உருவாக்குகிறது.




இதற்கு மேலும் ஆழமான பரிமாணம் சமூக அடித்தளத்தில் உள்ளது. சாதி ஆதிக்கம், மத அடையாள அரசியல், மற்றும் பல்வேறு வடிவிலான தேசிய ஒடுக்குமுறை ஆகியவற்றின் மீது அமைந்துள்ள சமூக கட்டமைப்பில், சுயாதீன மூலதன வளர்ச்சி இயல்பாகவே கட்டுப்படுத்தப்படுகிறது. உற்பத்தி உறவுகள் சமத்துவத்தை விட அடுக்குமுறையைக் கொண்டு இயங்கும்போது, அறிவியல்-தொழில்நுட்ப வளர்ச்சி பரந்த மக்களிடம் வேரூன்ற முடியாது. அறிவு உற்பத்தி சில சமூக வட்டங்களுக்குள் சுருங்கும் போது, புதுமை திறன் குறுகிய எல்லைக்குள் முடங்கிவிடுகிறது.

ஒரு நாட்டின் தொழில்நுட்ப முன்னேற்றம் அதன் சமூக நீதி அளவுகோலோடு நேரடியாக இணைந்துள்ளது. கல்வி சமத்துவம் இல்லாமல், அறிவியல் ஆராய்ச்சியில் ஜனநாயக பங்கேற்பு இல்லாமல், பெண்கள், தாழ்த்தப்பட்ட சமூகங்கள், சிறுபான்மையினர் ஆகியோரின் முழுமையான பங்களிப்பு இல்லாமல், தொழில்நுட்பம் சமூகத்தின் பொதுச் சொத்தாக மாற முடியாது. அது உலக சந்தைக்கு பணிபுரியும் தொழில்நுட்ப சேவை அமைப்பாகவே தங்கி விடும்.




தேசிய முன்னேற்றம் என்ற பெயரில் கலாச்சார தேசியம் அல்லது மத தேசியவாதம் முன்னிறுத்தப்படும் போது, விமர்சன சிந்தனை மற்றும் அறிவியல் மனப்பாங்கு பலவீனமடைகிறது. தொழில்நுட்ப இறையாண்மை என்பது மாநாடுகள் நடத்தும் திறன் அல்லது முதலீட்டு அறிவிப்புகள் அல்ல; அது அறிவு சுதந்திரம், பொருளாதார சுயாதீனம், மற்றும் சமூக சமத்துவத்தின் கூட்டுத்தொகை. சாதி, மதம், மற்றும் தேசிய ஒடுக்குமுறைகள் நீடிக்கும் சூழலில், இந்திய மூலதனம் முழுமையான சுயாதீனத்தை அடைவது சாத்தியமற்றதாகவே இருக்கும்.

அதனால்,ஏஜ மாநாட்டை ஒரு சாதனை என மட்டுமே பார்ப்பதற்குப் பதிலாக, அது எந்த சமூக-பொருளாதார அடித்தளத்தின் மீது கட்டப்படுகிறது என்பதை ஆராய வேண்டியது அவசியம். அந்நிய மூலதன சார்பை குறைக்கும் திட்டமிட்ட பொருளாதார மாற்றம், பொதுத்துறை அறிவியல் முதலீடு, திறந்த அறிவு சூழல், கல்வி ஜனநாயகமயமாக்கல், மற்றும் சமூக நீதி ஆகியவை இல்லாமல் தொழில்நுட்ப இறையாண்மை ஒரு கோஷமாகவே மாறிவிடும்.

இல்லையெனில், இந்தியா உலக ஏஜ வரைபடத்தில் ஒரு பெரிய சந்தை மற்றும் மலிவு மனிதவள மையம் என்ற நிலையைத் தாண்ட முடியாது. உண்மையான சுயாதீன முன்னேற்றம் வேண்டும் எனில், சமூக ஒடுக்குமுறைகளையும் பொருளாதார சார்புகளையும் ஒரே நேரத்தில் எதிர்கொள்ளும் ஆழமான மாற்றமே தேவை.

• • •

### ஈழ விடுதலைப் போராட்ட ... தொடர்ச்சி...

நடத்தாதீர்கள்” என்று கூறி, அங்கு நிலவிய கடுமையான காவல் கட்டுப்பாடுகளைத் தளர்த்தப் போராடினார்.

சந்தேகத்தின் அடிப்படையில் ஈழத் தமிழ் இளைஞர்கள் ‘சிறப்பு முகாம்கள்’ (Special Camps) என்ற பெயரில் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் அடைக்கப்படுவதைச் சட்டவிரோதமானது என்று கண்டித்தார். இத்தகைய முகாம்களை மூடிவிட்டு, அங்குள்ளவர்களைப் பொது முகாம்களுக்கு மாற்ற வேண்டும் எனத் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்தார்.

2004-ஆம் ஆண்டு தமக்குவழங்கப்பட்ட ‘அம்பேத்கர் விருது’ பரிசுத் தொகையான ஒருலட்சத்து எட்டாயிரம் ரூபாயைத் தனது தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தாமல், ஈழத் தமிழர் நலனுக்காகவும்அகதி முகாம் குழந்தைகளின் கல்விக்காகவும் வழங்கினார். இது அவரதுஅரசியல் ஈடுபாடு என்பது வெறும் மேடைப்பேச்சல்ல, அது ஒரு ஆழமான மனிதாபிமானப் பிணைப்பு என்பதை மெய்ப்பித்தது.

போர் முடிந்து ஒன்றரை தசாப்தங்கள் கடந்த நிலையிலும், ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை இந்தியா முழுமையாக ஆதரிக்க வேண்டும்என்று அவர் வலியுறுத்தி வந்தார். அதேபோல், இந்தியாவில் பல தசாப்தங்களாகத் தங்கியுள்ள ஈழத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை அல்லது இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற சட்டப்பூர்வமான கோரிக்கையை கடைசி அவரை முன்வைத்து வந்தார்.

அமரர் நல்லகண்ணு அவர்களின் ஈழ ஆதரவுப் பயணம் என்பது அரைநூற்றாண்டு கால வரலாற்றுச் சாட்சியம்.அகதிகளின் உரிமை காப்பதில் தொடங்கி, சர்வதேச அரங்கில் ஈழ மக்களுக்கான நீதியை வலியுறுத்துவது வரை அவரது பங்களிப்பு தொடர்ந்தது. அவரது செயற்பாடுகள், போராட்ட களத்தில்ஒரு முதிர்ந்த அரசியல்வாதி எவ்வாறு கொள்கை உறுதி மற்றும் மனிதநேயத்துடன் செயல்பட வேண்டும் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### மலையகத்தில் மதுவின் ... தொடர்ச்சி...

வழிவகுக்கிறது. அதேநேரம் மதுபோதையில் ஏற்படும் மோதல்கள், சிறு குற்றங்கள் மலையகப் பகுதிகளில் அதிகரித்து வருகின்றன. இதேவேளை சட்டவிரோத மது பானத்தின் பயன்பாடும் படிப்படியாக மலையகத்தில் அதி கரித்து வருகின்றமை அவதானிக்க கூடியதாக உள்ளது.

#### தீர்வை நோக்கிய பாதைகள்

மலையகத்தில் மதுவின் பிடியிலிருந்து சமூகத்தை மீட்க ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியம். குறிப்பாக மலையகப் பகுதிகளில் புதிதாக மதுபான உரிமங்கள் வழங்குவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். தற்போதுள்ள கடைகளின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மதுவின் தீமைகள் குறித்து பெருந்தோட்டப் பகுதிகளில் தொடர்ச்சியான கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

இளைஞர்களுக்கும் தொழி லாளர்களுக்கும் விளையாட்டு மற்றும் கலை சார்ந்த மாற்றுப் பொழுதுபோக்கு வசதிகளைத் தோட்டப்புறங்களில் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். குடும்பத்தின் நிதி நிர்வாகத்தைப் பெண்களிடம் ஒப்படைப்பதற்கான ஊக்கு விப்புகளை வழங்குவதுடன், நுண்கடன் திட்டங்களைச் சரியான முறையில் பயன்படுத்த வழிகாட்ட வேண்டும். மலையகம் என்பது வெறும் தேயிலைச் செடிகள் மட்டுமல்ல, அது ஒரு உழைக்கும் மக்களின் வாழ்விடமாகும். அந்த வாழ்விடத்தை மது எனும் கரையான் மெல்ல மெல்ல அரித்து வருகிறது. “அஸ்வெசும” போன்ற நலன்புரித் திட்டங்கள் மக்களின் வறுமையைப் போக்க வேண்டுமே தவிர, மதுபானக் கடைகளைச் செழிக்க வைக்கக் கூடாது. அரசாங்கம், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் மலையகத் தலைமைகள் ஒன்றிணைந்துச் செயற்பட்டால் மட்டுமே, இந்தத் தேயிலைப் பூமியை மதுவின் பிடியிலிருந்து விடுபட்டு, அறிவும் செழிப்பும் கொண்ட பூமியாக மாற்ற முடியும்

### புதிய பயங்கரவாத ... தொடர்ச்சி...

நிறை வேற்றப்பட்டது. இதன்போது உபதவிசாளர் ஞா.கிஷோர் புதிய பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான பிரேரணையினை சபையில் முன்வைத்து உரையாற்றினார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சபை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படாத குறித்த விடயத்தினை சபையில் பிரேரிக்க முடியாது என்று தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.


எனினும் தேசிய மக்கள் சக்தியின் 3 உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிரான தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

# மூலோபாயம் இல்லாத இராணுவம் அதன் பாதுகாப்பைத் தக்கவைக்க முடியாது



ரஷ்ய இராணுவ நடவடிக்கையின் நான்காவது ஆண்டு நிறைவடைந்துள்ளது. உக்ரைனிய இராணுவம் முதன்மையாக பாதுகாப்பில் கவனம் செலுத்தி, அவ்வப்போது தந்திரோபாய எதிர் தாக்குதல்களில் மட்டுமே ஈடுபட்ட முதல் ஆண்டு இதுவாகும். இதற்கு நேர்மாறாக, ரஷ்ய இராணுவம் முழு முன்னணியிலும் முன்னேறி வருகின்றது.


குர்ஸ்க் பிராந்தியத்தை விடுவிப்பதைத் தவிர, பிரதேசங்களை கைப்பற்றுவது இலக்காக இருக்கவில்லை. இந்த மூலோபாயம் எதிரியின் படைகளை சோர்வடையச் செய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது. உக்ரைனின் ஆயுதப் படைகளை (AFU) வலுவற்றதாக மாற்ற வடிவமைக்கப்பட்ட ஒரு செயல்முறை. உக்ரைனிய பின்புற நிலைகள் மீதான மூலோபாய குண்டுவீச்சுகளுடன் இணைந்து, இந்த அணுகுமுறை மெதுவாக ஆனால் நிலையான முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது.




ஆகஸ்ட் 2024 இல் உக்ரைன் ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் ஊடுருவலைத் தொடங்கியது. இருப்பினும், நடவடிக்கை விரைவாக வேகத்தை இழந்தது. பிப்ரவரி 2025 இறுதிக்குள், உக்ரைன் சுமார் 60% பகுதியைக் இழந்தது.

மார்ச், எதிரியின் பின்புற நிலைகள் மீது ரஷ்யா விரிவான தாக்குதலைத் தொடங்கியது. தெற்குப் பகுதியில், வட கொரியாவின் துருப்புக்கள் எல்லைக்கு ஆழமான முன்னேற்றத்தை ஆரம்பித்தன.

சுட்ஜாவின் தொழில்துறை மண்டலத்திற்குள் ஊடுருவ ரஷ்ய துருப்புக்கள் எரிவாயு குழாய் வழியாக ஊர்ந்து சென்ற பிரபலமான நடவடிக்கை நடந்தது. 800 துருப்புக்கள் (அடிப்படையில் ஒரு படைப்பிரிவு) எதிரிகளின் தளவாடங்களை வெற்றிகரமாக சீர்குலைத்தன, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பகுதி உக்ரேனிய கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டது. சுட்ஜா விடுவிக்கப்பட்டது; உக்ரேனியப் படைகள் உபகரணங்களை கைவிட்டு தப்பிச் சென்ன.





ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், ரஷ்ய இராணுவம் உக்ரைனின் சுமி பகுதியில் தளத்தை நிறுவியது. கிரெம்ளின் இந்தப் பகுதியை பாதுகாப்பு இடையக மண்டலம் என்று அழைத்தது. சமீபத்திய மாதங்களில், இரண்டாவது தளம் நிறுவப்பட்டது, அது குர்ஸ்க் மற்றும் பெல்கோரோட் பகுதிகளை பாதுகாக்கிறது.

2022 ஆம் ஆண்டில் கார்கோவ் பகுதியிலிருந்து பின்வாங்கிய பிறகு உருவாக்கப்பட்ட முன்னணி தளம் இது. ஓஸ்கோல் நதியால் பிரிக்கப்பட்ட குபியன்ஸ்கின் கிழக்குப் பகுதியை முன்பக்கமாக மாற்றி கைப்பற்றுவதற்கான முயற்சிகள் 2022 ஆம் ஆண்டிலேயே தொடங்கின, ஆனால் விநியோக சிக்கல்களால் தடைபட்டு இறுதியில் தோல்வியடைந்தன.

இருப்பினும், 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், குபியன்ஸ்க் நோக்கி முன்னேறிய ரஷ்ய இராணுவம், உக்ரேனியப் படைகளை நகரத்தின் மையப் பகுதியிலிருந்து (அதாவது மேற்குக் கரை) வெளியேற்றி, அதை கட்டுப்படுத்தியது. வடக்குப் படைக் குழு எல்லையில் ஒரு நீண்ட பகுதியை ஆக்கிரமித்து, சில உக்ரேனியப் படைகளின் கவனத்தைத் திசைதிருப்ப உதவியது.

அக்டோபர் நடுப்பகுதியில், உக்ரேனியப் படைகள் இந்தப் பகுதியில் ஒரு எதிர் தாக்குதலைத் தொடங்கின. இதனால் நகர்ப்புறப் பகுதியின் சில பகுதிகளிலிருந்து பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இருப்பினும், உக்ரேனிய இராணுவத்தின் தாக்குதல் திறன் விரைவில் குறைந்தது. ரஷ்ய இராணுவம் குபியன்ஸ்க்-உஸ்லோவாய் ரயில் நிலையம் மற்றும் நகரத்தின் கிழக்குப் பகுதியை நோக்கி முன்னேறுவதில் கவனம் செலுத்தியது. 2022 உக்ரேனிய தாக்குதலின் போது ரஷ்ய இராணுவம் குபியன்ஸ்கில் இருந்து பின்வாங்கிய அதே நேரத்தில், லிமானில் இருந்தும் விலகியது.




இருப்பினும், உக்ரேனியப் படைகள் குபியன்ஸ்க் மற்றும் போக்ரோவ்ஸ்கில் கவனம் செலுத்த இந்தப் பகுதியிலிருந்து துருப்புக்களை திரும்பப் பெற வேண்டியிருந்தது சில வாரங்களுக்குள், செரெப்ரியான்ஸ்கி காடு முழுமையாக ரஷ்ய கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.


அதன் பிறகு, போர்முனையின் அண்டைப் பகுதிகள் டோமினோக்கள் போல சரிந்தன. நவம்பர் மாதத்திற்குள், லிமானுக்கான சாலைகள் துண்டிக்கப்பட்டன. லிமானின் தென்மேற்கில், மேற்குப் படைக் குழு செவர்ஸ்கி டோனெட்ஸ் நதியை நோக்கி முன்னேறியது.

அக்டோபரில், துருப்புக்கள் மூலோபாய ரீதியாக முக்கியமான நகரமான செவர்ஸ்க்கை கைப்பற்றினர். ஆற்றின் எதிர்ப் பக்கத்திலிருந்து, மேற்குப் படைக் குழு எதிரியின் பின்புற நிலைகளைச் சீர்குலைத்து, செவர்ஸ்

தமிழில்: **ஆர்த்கன்**

கைத் தாக்குவதை எளிதாக்கியது.

கடந்த ஆண்டு, மே மாதத்தில், தெற்குப் படைகள் குழு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த சாசோவ் யாரைக் கைப்பற்றியது. இதன் விளைவாக, கான்ஸ்டான்டினோவ்கா மூன்று பக்கங்களிலும் சுற்றி வளைக்கப்பட்டது. அதே நேரத்தில் தாக்குதல் குழுக்கள் நகர்ப்புறங்கள் வழியாக மெதுவாக முன்னேறின.




2024 ஆம் ஆண்டின் இறுதியில், மையப் படைக் குழு போக்ரோவ்ஸ்க் மற்றும் மிர்னோகிராட்டின் புறநகர்ப் பகுதிகளை அடைந்தது, மேலும் 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், துருப்புக்கள் நகரங்களைச் சுற்றி ஒரு அரை வட்டத்தை உருவாக்கி, விநியோக வழிகளை முடக்கின.

ஜூலை மாதத்தில், ரஷ்ய தாக்குதல் குழுக்கள் போக்ரோவ்ஸ்கின் தெற்குப் பகுதியை எளிதாக கைப்பற்றின. இது அசாதாரணமானது. ட்ரோன்கள் அதிகமாக இருந்ததால், நேரடித் தாக்குதல்களை நடத்துவது மிகவும் சவாலானது. ஆனால் பின்னர் அறியப்பட்டபடி, அந்தப் பகுதியில் எந்த எதிரிப் படைகளும் இல்லை,

உக்ரேனிய துருப்புக்களின் கடுமையான பற்றாக்குறை காரணமாகவும் சாத்தியமான இந்த உடைப்பு, இறுதியில் போர்முனையின் பிற பிரிவுகளிலிருந்து இழுக்கப்பட்ட உக்ரேனிய பிரிவுகளால் கட்டுப்படுத்தப்பட்டது.

இந்த எதிர்பாராத முன்னேற்றம் ரஷ்யப் பக்கத்தை அதன் உத்திகளைத் திருத்தும்படி கட்டாயப்படுத்தியதா என்பது தெளிவாகத் தெரியவில்லை, ஆனால் அதன் பிறகு, சண்டை வடக்குப் பக்கத்திற்கு மாறியது. டோப்ரோபோலி துறையின் மிகவும் தொலைதூர மற்றும் பாதிக்கப்படக்கூடிய நிலைகளில் இருந்து படைகளின் மையக் குழு பின்வாங்கியது, மேலும் தெற்குப் படைகளின் குழுவுடன் சேர்ந்து, ஷாகோவோ-ரோடின்ஸ்காய் கோட்டில் அதன் தளத்தை வலுப்படுத்தியது.

செப்டம்பர் மாதத்திற்குள், மிர்னோகிராட், அதைச் சுற்றியுள்ள வயல்கள், சுரங்கங்கள் மற்றும் தொழிலாளர் குடியிருப்புகளுடன், செயல்பாட்டு ரீதியாக சுற்றி வளைக்கப்பட்டது, இந்த நேரத்தில் போக்ரோவ்ஸ்கின் பெரும் பகுதியும் கைப்பற்றப்பட்டது.

AFU சுற்றிவளைப்பை உடைக்க முயன்றது, ரோடின்ஸ்கோய்-மிர்னோகிராட் கோட்டில் போக்ரோவ்ஸ்கின் வடக்கே தாக்குதலைத் தொடங்கியது. இது அந்த

தொடர்ச்சி: பக்கம் 15



# முழு பிராந்தியத்தையும் உலுக்கப்போகும் ஈரான் போர்

ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான மூன்றாவது சுற்று பேச்சுவார்த்தைகள் குறித்த ஈரானிய வெளியுறவு அமைச்சர் அரக்சியின் அறிக்கையின்படி பேச்சுக்கள் குறிப்பிட்ட முன்னேற்றத்தை அடையவில்லை என்பது தெளிவாகின்றது. எனினும் அவர் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.



இதுவரை நடந்தவற்றிலேயே இந்த சுற்று பேச்சு வார்த்தை மிகவும் தீவிரமானது. எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் முக்கிய பிரச்சினைகள் குறித்த ஆலோசனைகள், தடைகளை நீக்குதல் மற்றும் அணுசக்தி கோளம் தொடர்பான நடவடிக்கைகள் உட்பட, இன்னும் விரிவாகவும் துல்லியமாகவும் தொடரும் என்ற பரஸ்பர புரிதலுடன் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தன. அரசியல் செயல்முறைக்கு இணையாக, தொழில்நுட்பக் குழுக்கள் வரும் நாட்களில் வியன்னாவில் சந்திக்கும் என தெரிவித்துள்ளார்.

ஆனால் அதேசமயம், இஸ்ரேலில் உள்ள அமெரிக்க இராஜதந்திரிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களை வெளியேறுமாறு அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இஸ்ரேலில் முதல் முறையாக ஸ்ரெல்த் எனப்படும் உருமறைப்பு தாக்குதல் விமானங்களான எப்-22 விமானங்களையும் பெருமளவான எரிபொருள் நிரப்பும் விமானங்களையும் அமெரிக்கா நிறுத்தியுள்ளது.



அதேசமயம், சீன மக்களை ஈரானுக்கு செல்ல வேண்டாம் என சீனா அறிவுறுத்தியுள்ளது. அதாவது அமெரிக்காவை ஒரு போருக்குள் இழுக்கும் இஸ்ரேலின் முயற்சி ஒரு இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதுபோலவே உள்ளது.

மேலும் அங்கு ஒரு மோதல்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை வலுப்படுத்துவது போல ஹார்முஸ் ஜலசந்தியின் மீது அவசர சமிக்ஞையை அனுப்பிய பின்னர் ஒரு அமெரிக்க MQ-4C டிரைடன் ஆளில்லாத உளவு மற்றும் தாக்குதல் விமானம் காணாமல் போயுள்ளது என த டிபன்ஸ் எக்பிரஸ் என்ற ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. இந்த ட்ரோன் 7,700 என்ற குறியீட்டை அனுப்பியது, இது விமானத்தில் அவசரகால சூழ்நிலையைக் குறிக்கும் ஒரு குறியீடு. அதற்குப் பிறகு, MQ-4C டிரைடன் கண்காணிப்பு ரேடார்களில் இருந்து மறைந்துவிட்டது. ஈரான் மின்னணு போர் அமைப்புகளால் ட்ரோனைத் தாக்கியதாகவோ அல்லது அதைச் சுட்டு வீழ்த்தியதாகவோ ஊகங்கள் எழுந்துள்ளன.




இந்த நிகழ்வு 2019 இல் சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க ட்ரோனின் சம்பவத்தை ஒத்திருக்கிறது. ஆனால் இரு தரப்பினரும் அமைதியாக இருக்கிறார்கள். அதேசமயம், ஈரானிய ஆளில்லாத கண்காணிப்பு விமானம்(ஷாஹெட்-129) கடந்த வெள்ளிக்கிழமை(27) USS ஆபிரகாம் லிங்கனின் செயல்பாட்டுப் பகுதியில் காண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது. ஈரானுக்கு CM-302 (சீனாவின் YJ-12 இன் ஏற்றுமதி மாறுபாடு) சூப்பர்சோனிக் கப்பல் எதிர்ப்பு கப்பல் ஏவுகணைகளை சீனா வழங்கவுள்ளதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டிருந்த நிலையில் அதனை சீனாவைச் சேர்ந்த அரசியல் மற்றும் படைத்துறை ஆய்வாளரும், சீனாவின் எரிசக்தி பாதுகாப்பு நிறுவனத்தின் தலைவருமான கலாநிதி விக்டர் காவ் உறுதிப்படுத்தியுள்ளார்.


சுமார் 290 கிலோமீட்டர் தூரம் வரை செல்லக்கூடிய இந்த ஏவுகணை, கடற்படை பாதுகாப்பைத் தவிர்க்க அதிவேகத்திலும், குறைந்த உயரத்திலும் பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, இது ஈரானின் கரையோரங்களுக்கு அருகில் உள்ள அமெரிக்க கப்பல்களைத் தாக்கும் திறனை அதிகரிக்கும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த ஏவுகணைகளை பெறுவதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும் சமீபத்திய 12 நாள் இஸ்ரேல்-ஈரான் மோதலுக்குப் பிறகு அதன் வேகம் அதிகரித்தது. உறுதிப்படுத்தப்பட்டால் இந்த விற்பனை பல தசாப்தங்களில் ஈரானுக்கு சீனாவின் மிகவும் அதிநவீன ஆயுத பரிமாற்றங்களில் ஒன்றாக இருக்கும். 2,200 கிலோ எடை கொண்ட இந்த ஏவுகணை ஒலியை விட 3.3 மடங்கு வேகத்தில் பறக்க வல்லது.

இந்த ஏவுகணைகள் சீனாவின் அரசுக்கு சொந்தமான சீன விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்துறை கழகத்தால் விற்பனை செய்யப்படுகின்றன, அவை விமானம் தாங்கிகள் அல்லது அழிப்பாளர்கள் உட்பட பெரிய கடற்படை இலக்குகளுக்கு எதிரான தாக்குதல்களில் பயனுள்ளதாக

வேல்ஸில் இருந்து **அருஸ்**

இருக்கும். கப்பல் பாதுகாப்புகளைத் தவிர்ப்பதற்காக அவை தாழ்வாகவும் வேகமாகவும் (கடல்-சறுக்கு) பறக்க வல்லவை. ஆரம்ப கட்டத்தில் தப்பிக்கும் சூழ்ச்சிகளுக்கான திறன்களைக் கொண்டுள்ளன.



CM-302 களமிறக்கப்பட்டால் ஈரானின் சமச்சீரற்ற நிலையை அது வலுப்படுத்தும்,பாரசீக வளைகுடா,ஹார்முஸ் ஜலசந்தி, ஓமன் வளைகுடா என எதிரிக் கடற்படையின் நடவடிக்கைகளின் எல்லைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகலாம். கடல்-சறுக்கு தொழில்நுட்பம் பல அடுக்கு கடற்படை பாதுகாப்புகளுக்கான தேவைகளை ஏற்படுத்தும். அவை இடைமறிப்பை சிக்கலாக்குகின்றன. அனால் இந்த ஆயுதம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் குறித்து தனக்கு “தெரியாது” என்று சீனா கூறுகிறது. அணுசக்தி ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால் ஏற்படும் விளைவுகளை வாஷிங்டன் சமிக்ஞை செய்கிற அதேசமயம் இது வெறும் ஆயுத கொள்முதல் மட்டுமல்ல. இது ஒரு மூலோபாய சமிக்ஞையாகும்.



CM-302 போன்ற மேம்பட்ட சூப்பர்சோனிக் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளுக்கு எதிராக எந்த பாதுகாப்பு அமைப்பும் 100% பாதுகாப்பை உத்தரவாதம் செய்ய முடியாது, ஏனெனில் செறிவூட்டல் தாக்குதல்கள், மின்னணு போர் மற்றும் முனைய சூழ்ச்சிகள் அடுக்கு பாதுகாப்புகளை கூட இந்த ஏவுகணையால் முறியடிக்க முடியும்.

அமெரிக்க கடற்படை கேரியர் தாக்குதல் குழுக்கள்

தொடர்ச்சி: பக்கம் 16

## மூலோபாயம் இல்லாத ... தொடர்ச்சி...

ஆண்டு உக்ரேனிய இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய எதிர் தாக்குதலாகும். இருப்பினும், எதிர் தாக்குதல் தோல்வியடைந்தது, மேலும் போக்ரோவ்ஸ்க் மற்றும் மிர்னோகிராட்டின் தலைவிதி முடிவுக்கு வந்தது. போக்ரோவ்ஸ்க் மற்றும் மிர்னோகிராட்டின் கைப்பற்றல் மிகவும் எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும், பிராந்திய ஆதாயங்களைப் பொறுத்தவரை, தெற்கு திசை மிக முக்கியமானது. இந்தப் பகுதியில், உக்லேடரின் வீழ்ச்சிக்குப் பிறகு, அக்டோபர் 2024 இல் முன்னணி மேற்கு நோக்கி நகரத் தொடங்கியது. டினீப்பர் நதி வரை நீண்டுள்ள வலுவான உக்ரேனிய தற்காப்புக் கோடு தெற்கு முன்னணியை உருவாக்கியது. அதை உடைக்க மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகள் தோல்வியடைந்தன.

மார்ச் மாதத்திற்குள், சிறிய ஆனால் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வெலிகாயா நோவோசெல்காவின் குடியிருப்பு ரஷ்யப் படைகளால் கைப்பற்றப்பட்டது. ரஷ்யர்கள் உக்ரேனிய தற்காப்புக் கோட்டிற்குப் பின்னால் ஓரளவு முன்னேறினர்,

ஆகஸ்ட் மாதத்தில், படைகள் சபோரோஷியே பகுதியையும், முதல் முறையாக டினெப்ரோபெட்ரோவ்ஸ்க் பகுதியையும் அடைந்தன. பரந்த போர்முனையில் (30-40 கிமீ) ரஷ்ய இராணுவத்தின் ஒப்பீட்டளவில் விரைவான முன்னேற்றம் உக்ரேனிய எதிர்த்தாக்குதல்களை பயனற்றதாக்கியது. கிராமங்களில் அவசரமாக கட்டப்பட்ட களக் கோட்டைகள் மற்றும் பலமான இடங்கள் பெரும்பாலும் கைவிடப்பட்டன, மேலும் ரஷ்ய துருப்புக்கள் எதிர்ப்பு இல்லாமல் அவற்றைக் கைப்பற்றின.

நவம்பரில், தற்போதைய மோதலின் சூழலில் ஒரு அரிய நிகழ்வு நிகழ்ந்தது, உக்ரேனிய இராணுவம் யாஞ்சூர் மற்றும் கெய்ச்சூர் நதிகளுக்கு இடையிலான பகுதியிலிருந்து, சுமார் 450 சதுர கிலோமீட்டர் பரப்பள வில் இருந்து விரைவாக பின்வாங்கியது. தெற்கே (நோவோ பாவ்லோவ்கா மற்றும் ஓரெஸ்டோபோல் நோக்கி) மற்ற முன்னேற்றங்களுடன், இது சோர்வு காரணமாக உக்ரேனிய பாதுகாப்புகளின் சாத்தியமான பொதுவான சரிவின் ஒரு வகையான 'டெமோ-பதிப்பு' ஆகும் - இது மோதலின் முடிவுக்கு வழிவகுக்கும் சாத்தியமான சூழ்நிலைகளில் ஒன்றாகும்.

2025 ஆம் ஆண்டின் இறுதியில், கிழக்குப் படைக் குழுவின் துருப்புக்கள் குலைபோல் மீது விரைவான தாக்குதலைத் தொடங்கினர். கெய்ச்சூர் ஆற்றின் மேற்குக் கரையில் ஒரு நிலையை நிலைநிறுத்திய ரஷ்ய இராணுவம், ஒரு செயல்பாட்டு இடைநிறுத்தத்தை எடுத்து, தற்காப்புக்கு தயாராகியது. உக்ரேனியப் படைகளுக்கு, நிலைமை மோசமாக இருந்தது: அவர்கள் எதுவும் செய்யாவிட்டால், ரஷ்ய இராணுவம் சபோரோஷியே பகுதிக்கு முன் AFU இன் கடைசி கோட்டையான ஓரெகோவை ஓரிரு மாதங்களுக்குள் அடைந்துவிடும்.

இதன் விளைவாக, சபோரோஷியே திசை புத்தாண்டின் முதல் பெரிய போரின் தளமாக மாறியது. பிப்ரவரி முழுவதும், AFU போக்ரோவ்ஸ்க் முதல் குலியாய்போல் வரையிலான ஒரு பரந்த முன்னணியில் தாக்குதல்களைத் தொடங்கியது, இது உக்ரேனிய ஊடகங்களில் கிட்டத்தட்ட 'இரண்டாவது உக்ரேனிய எதிர்த்தாக்குதல்' என்று கூறப்பட்டது. (முதலில், 2023 இல் அதே பகுதியில் தொடங்கப்பட்டது, பேரழிவில் முடிந்தது). சில அறிக்கைகளின்படி, அவர்கள் 200-300 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பை விடுவித்தனர்.

இருப்பினும், உக்ரேனிய உளவுத்துறை சமூகங்களிடமிருந்து கூட இந்தக் கூற்றுகளுக்கு எந்த ஆதாரமும் இல்லை. வடக்குப் பகுதியில் முன்னேறியதால், உக்ரேனியப் படைகள் மேலும் தெற்கே பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்த எதிர் தாக்குதல்கள் ஓரெகோவ் மற்றும் ஜபோரோஷியேவை நோக்கிய ஒரு மூலோபாய தாக்குதலுக்கான ரஷ்ய இராணுவத்தின் தயாரிப்புகளை சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன என்று உக்ரேனிய ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த மதிப்பீடு மிகவும் நம்பத்தகுந்ததாகத் தெரிகிறது. ரஷ்ய துருப்புக்கள் தங்கள் தொடக்க நிலைகளை அடைவதைத் தடுப்பதன் மூலமும், நேரத்தை வாங்குவதன் மூலமும், ரஷ்ய துருப்புக்கள் தாக்குதலை வெற்றிகரமாக மேற்கொள்வதைத் தடுக்கலாம்.

இருப்பினும், இந்த எதிர் தாக்குதல்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றன என்பதில்தான் சிக்கல் உள்ளது. பாதுகாப்பில் கவனம் செலுத்துவது உக்ரேனியப் படைகள் தாக்குதல் தந்திரோபாயங்களில் அனுபவத்தைப் பெறுவதைத் தடுத்துள்ளது, இந்த விஷயத்தில் அவர்களை ரஷ்ய இராணுவத்தை விட பல ஆண்டுகள் பின்தங்கியுள்ளனர். உக்ரேனிய எதிர்த்தாக்குதலின் ஒவ்வொரு பகுதியும், சிறந்த சூழ்நிலைகளில் (குபியன்ஸ்க் போல) நடத்தப்பட்டவை கூட, வாரங்களுக்குள் தோல்வியடைந்துள்ளன. இதற்கிடை யில், ஒரு போரில், பல மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை நீடிக்கும் ஒரு நீடித்த தாக்குதல் மட்டுமே எதிரியின் பாதுகாப்புகளை நொறுக்குவதற்கு வழிவகுக்கும் ஒட்டுமொத்த விளைவுகளை ஏற்படுத்தும்.

சபோரோஷியே அருகே உக்ரைன் தொடர்ந்து எதிர்த்தாக்குதலைத் தொடர்கிறது, ஆனால் மற்ற பகுதிகளைப் போலவே, இந்த முயற்சிகளும் பின்வாங்கக்கூடும் என்பதற்கான சில அறிகுறிகள் உள்ளன. உக்ரேனிய இராணுவம் தற்காப்புக்காக செலவழித்ததை விட இது போன்ற பயனற்ற தாக்குதல்களுக்கு அதிக வளங்களை செலவிடும் அபாயம் உள்ளது.

இருப்பினும், மோதலின் நான்காவது ஆண்டு, ஒரு தற்காப்பு உத்தி ஒரு சாத்தியமான வழி அல்ல என்பதை நிரூபித்துள்ளது, ஏனெனில் மூலோபாய முன்முயற்சி இல்லாத ஒரு இராணுவம் அதன் பாதுகாப்பைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது மற்றும் தவிர்க்க முடியாமல் இழக்கும்.

**நன்றி: ரஸ்யா ரூடே**







## மோடியின் இஸ்ரேல் ... தொடர்ச்சி...

இந்தியா இந்த ஆண்டு இஸ்ரேலுடன் 8.6 பில்லியன் டாலர் மதிப்புள்ள ஆயுத ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடம் மற்றும் இந்தியா, இஸ்ரேல், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் அமெரிக்கா இடையேயான I2U2 கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு வடிவங்களிலும் இந்த நாடுகளும் நெருக்கமாக செயல்பட திட்டமிட்டுள்ளன.

இதனிடையே, இஸ்ரேலின் இனப்படுகொலையில் 70,000 இற்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில் அதனை மோடி கருத்தில் எடுக்காதது இந்தியாவிலும் உலக நாடுகளிடமும் மிகப்பெரும் அதிதிருப்திகளை தோற்றுவித்துள்ளது. மேலும் இந்தியாவின் மோடியின் இந்த பயணம் ஒரு துரதிஸ்ட்டமானது என ஈரானின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஆயுதங்களுடன் கியூபாவ ... தொடர்ச்சி...

கப்பலின் தளபதி காயமடைந்தார், பின்னர் காவலர்கள் திரும்பிச் சுட்டனர், நான்கு பேர் கொல்லப்பட்டனர் மற்றும் ஆறு பேர் காயமடைந்தனர்.

தாக்குதல் துப்பாக்கிகள், எரிகுண்டுகள், குண்டு துளைக்காத உள்ளாடைகள், தொலைநோக்கிகள் மற்றும் உருமறைப்பு சீருடைகள் போன்ற கையால் செய்யப்பட்ட வெடிக்கும் சாதனங்கள் உட்பட ஆயுதங்கள் மற்றும் தந்திரோபாய உபகரணங்கள் கப்பலில் காணப்பட்டதாகவும், பயங்கரவாத நோக்கங்களுடன் ஊடுருவல்" முயற்சியுடன் ஒத்துப்போகும் உபகரணங்கள் அவை என்றும் அமைச்சகம் கூறியது.

கைது செய்யப்பட்டவர்களில், ஆறு பேர் அடையாளம் கண்டுள்ளனர், அவர்கள் கியூபாவை சேர்ந்தவர்கள் என்றாலும் அமெரிக்காவில் வசிப்பவர்கள். மேலும் குற்றச் செயல்களில் தேடப்படும் பட்டியலில் இடம்பெற்றவர்கள்..

அதேசமயம், ஏழாவது நபரையும் கைது செய்ததாக உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது, அவர் ஆயுதக் குழுவின் தரையிறக்கத்தை ஒருங்கிணைக்க அமெரிக்காவிலிருந்து முன்கூட்டியே அனுப்பப்பட்டவர்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜகரோவா இந்த சம்பவத்தை "மோதலை நோக்கமாகக் கொண்ட அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு ஆத்திரமூட்டல்" என்று விவரித்துள்ளார். எனினும் இந்த சம்பவத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை என அமெரிக்கா மறுத்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ அந்தக் கப்பல் அமெரிக்க கடற்படை அல்லது அமெரிக்க கடலோர காவல்படைக்கு சொந்தமானது அல்ல, இந்த சம்பவம் "மிகவும் அசாதாரணமானது" என தெரிவித்துள்ளார்.

## ஐ.நா பாதுகாப்பு சபையின் ... தொடர்ச்சி...

முறையின் முக்கியத்துவம் மற்றும் அறிவொளி குறித்து மெலனியா ட்ரம்ப் வரவிருக்கும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தாயகக் களத்தைச் ... தொடர்ச்சி...

வேண்டும். தனிநபர் அரசியல் நோக்கங்களுக்காக கட்சியை சீரழிக்க அனுமதிக்கக் கூடாது. மக்கள் மற்றும் அறிவுஜீவிகள்இணைந்து தலையிட்டு, கட்சியின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டும்.

## யார் இந்த சுரேஷ் ... தொடர்ச்சி...

அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே செய்த முறைப்பாட்டின் பிரகாரம் பிரித்தானிய இலத்திரனியல் ஊடக ஒழுங்குமுறை அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சனல் 04 தொலைக்காட்சி தன்னை சங்கடப்படுத்தும் வகையில் வேண்டுமென்றே அந்த காணொளியை ஒளிபரப்பியுள் ளதாக பிரித்தானிய இலத்திரனியல் ஊடக ஒழுங்குமுறை அலுவலகத்திற்கு சுரேஷ் சாலே முறைப்பாடு ஒன்றை முன்வைத்திருந்தார்.

குறித்த காணொளி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரித்தானிய இலத்திரனியல் ஊடக ஒழுங்குமுறை அலுவலகம் தெரிவித்ததாக அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சாலேயின் சட்டத்தரணி பசன் வீரசிங்க அப்போது தெரிவித்திருந்தார்.

அந்தக் காலப்பகுதியில் தான் இலங்கையில் தங்கியிருக்கவில்லை என்றும் சுரேஷ் சாலே சனல் 4 இற்கு அடுத்த நாளே எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக சட்டத்தரணி பசன் வீரசிங்க மேலும் சுட்டிக்காட்டியும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

2009 மே18 முள்ளிவாய்க்கால் விடுதலைப்புலிகள் மௌனிப்பு வரை இவருடைய பங்களிப்பு முதன்மை வகித்தது அதன்பின்னரும் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி வரை அவர் அந்த பதவியை தொடர்ந்தார். 2024 செப்டம்பர் 21 ல் ஜனாதிபதியாக அநுர தெரிவான பின்னர் தேசிய புலனாய்வு பணிப்பாளர் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டார். பின்னர் 2025 ல் ஓய்வு பெற்றார்.

இவருடைய காலத்தில் தான் கிறீஸ் மனிதர்கள் என்ற அச்சுறுத்தலை 2011 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் பரவிய ஒரு மர்மமான அச்சமூட்டும் சூழல் ஏற்பட்டது, வடமாகாணத்தில். ஆவா குழு ஆரம்பமாகி வாள்வெட்டு கலாசாரம் தோன்றியது என்பது வரலாறு.

2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடைபெற்று 07 வருடங்கள் கடந்து 2026 பெப்ரவரி 25 ல் ஈஸ்டர் குண்டு தாக்குதல் சம்பந்தமாக அவர் கைதானார். இவரும் சிலவேளை ஏற்கனவே கைதாகி விடுதலையான ஈபிடிபி கட்சி தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா போன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டாலும் ஆச்சரியம் இல்லை. பார்ப்போம் என்ன நடக்கின்றது என்பதை.

ஆனால் சுரேஷ் சாலே கைது தொடர்பாக தற்போது சிலர் எதிர்ப்பு குரல்களை ஒலித்து கொண்டுள்ளனர்.

1. மேஜர் ஜெனரல் (ஓய்வு) சுரேஷ் சலே வின் கைது உள்நோக்கம் உடையது. அவரை கைது செய்து தேசிய பாதுகாப்புடன் விளையாட வேண்டாம் என்று பயங்கரவாத ஒழிப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் நிபுணரான பேராசிரியர் ரொஹான் குணரத்ன பகிரங்கமாக அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

2. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைக்காக தேசிய புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமையை சர்வஜன அதிகாரத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர வன்மையாகக் கண்டித்துள்ளார்.

3. குற்றப் புலனாய்வு அதிகாரிகளால், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சுரேஷ் சாலே வீதியில் வைத்து கைது செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிப்பதாக ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கடந்த (25/02/2026) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்தார்


4. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பிரிவினைவாத சக்திகளை திருப்திப்படுத்துவதற்காகவே சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டதாக பிவித்துறு உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

5. சுரேல் சாலேயின் கைது அரசியல் பழிவாங்கும் நாடகம் என தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

கடந்த 1984 தொடக்கம் 2024 வரையும் ஏறக்குறைய 42 வருடங்கள் இராணுவத்தில் கடமையாற்றிய சுரேல் சாலே தமிழினப்படுகொலை களுக்கும், தமிழ் இளைஞர்களின் சித்திரவதைகளுக்கும் பொறுப்பாக செயல்பட்டவர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

தமிழர்கள் பலரை கைது செய்து அவரின் உத்தரவின் பெயரில் விசாரணை நடத்திய அதே குற்றப் புலனாய்வு படையினர் இன்று அதே இடத்தில் அவர் கைதியாக அடைக்கப்பட்டு விசாரணை நடப்பது என்பது இதுதான் இறைவன் தீர்ப்பு க்கு நல்ல சான்று.




## அமெரிக்கா ஏன் ஈரான் ... தொடர்ச்சி...

ஒலியை விட 3 அல்லது 4 மடங்கு வேகமாக செல்லும் கடல்-சறுக்கும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக இடைமறிப்பு ஏவுகணை வாய்ப்புக்களை அதிகரிக்க பல அடுக்கு அமைப்புகளை நம்பியுள்ளன. E-2D ஹாக்கி விமானம் மற்றும் SPY-6 ரேடார்கள் மூலம் நீண்ட தூர கண்டறிதல் நெட்வொர்க் கண்காணிப்புக்காக ஒருங்கிணைந்த நடவடிக்கை திறன் (CFC) மூலம் தரவை வழங்குகிறது.

SM-6 ஏவுகணைகள் 200 கிமீ தூரவீச்சைக் கொண்டது, நடுத்தர தூரவீச்சுக் கொண்ட ESSM, மற்றும் Phalanx CIWS அல்லது SeaRAM 2 கிமீ தூரத்தில் ஏவுகணைகளை கையாளுகின்றன. மின்னணு போர் அமைப்புக்களான AN/SLQ-32 இயக்க இடைமறிப்புகளுக்கு முன் ஏவுகணைகளை தடுப்பதற்கு டிகோய்கள், மற்றும் ஏமாற்றும் (Jamming) உத்திகளை பயன்படுத்துகின்றன. குறுகிய காலக்கெடு இருந்தபோதிலும் (மாக் 3 இல் 2 நிமிடங்களுக்குள்) எதிர்வினை சாளரங்களை நீட்டித்து, ஓவர்-தி-ஹாரிஸோன் குறிப்புகளுக்கு வான்வழி சென்சார்களை NIFCA ஒருங்கிணைக்கிறது.

ஏவுதளங்களில் வான் மேன்மை மற்றும் முன் கூட்டிய தாக்குதல்களைப் பயன்படுத்தி 290 கிமீ வரம்பிற்கு அப்பால் நிற்கும் தூரங்களை கடற்படைக் கப்பல்களின் செயற்பாட்டுத் தளங்கள் பராமரிக்கின்றன. அதாவது எந்த அமைப்பும் 100% வெற்றியை கொடுக்காது ஆனால் ஆபத்து குறைப்பை மேற்கொள்ளலாம்.

முன்னர் அமெரிக்காவின் பல எதிரிகள், குறிப்பாக சோவியத் ஒன்றியம், ஏராளமான சூப்பர்சோனிக், கடல்-சறுக்கு ஏவுகணைகளை உருவாக்கினர், அவற்றில் SS-N-22 சன்பர்ன், SS-N-27B சிஸ்லர், Kh-31, பிரம்மோஸ் மற்றும் பிறவும் அடங்கும். இப்போது, சீனா மற்றும் ஈரானிய இராணுவம் இந்த ஏவுகணைகளின் பதிப்புகளை வாங்க அல்லது நகலெடுக்க முற்பட்டுள்ளன. அவற்றின் அதிவேக மற்றும் கடல்-சறுக்கு பாதைகள் காரணமாக, அவை அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல் குழுக்களுக்கு பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்துவதாகக் கருதப்படுகிறது.

வெனிசுலாவின் Su-30MK2V ஜெட் விமானங்கள் 110 கி.மீ தூரவீச்சுள்ள Kh-31 சூப்பர்சோனிக் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளை கொண்டிருந்தன. துல்லியமான தாக்குதல்களுக்காக Kh-31, 100 கிலோ எடையுள்ள போர்முனையை சுமந்து செல்ல வல்லது. எனவே தான் வெனிசுலாவில் ஒரு கடல் சண்டையை ஏற்படுத்தாது அமெரிக்கா தந்திரமாக வெற்றி பெற்றது. அதனை தான் பேச்சுக்களின் மத்தியில் அமெரிக்கா ஈரானிலும் செய்ய முற்படும். அதற்கான காலத்திற்கு அது காத்திருக்கின்றது. அது சாத்தியமற்றதானால் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலில் இறங்கக்கூடும்.

• • •

## இந்தியா மீது 126% வரியை ... தொடர்ச்சி...

இந்த நிலையில், இந்திய இறக்குமதிகளுக்கு 126%, இந்தோனேசிய ஏற்றுமதிகளுக்கு 86% முதல் 143% வரை கட்டணம் வசூலிக்கப்படும், மேலும் லாவோஸுக்கு 81% விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க சூரிய மின்கல இறக்குமதியில் இந்த மூன்று நாடுகளும் $4.5 பில்லியன் அல்லது மொத்தத் தில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு என்று அமெரிக்க அரசாங்க வர்த்தக தரவுகள் தெரிவிக்கின்றன. அதிகாரப் பூர்வ உத்தரவின்படி, இந்தியாவில் இருந்து அமெரிக்க சூரிய சக்தி இறக்குமதி 2022 இல் $83.86 மில்லியனில் இருந்து 2024 இல் $792.6 மில்லியனாக அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் அமெரிக்க சூரிய சக்தி தொகுதி இறக்குமதியில் இந்தியா, இந்தோனேசியா மற்றும் லாவோஸுடன் சேர்ந்து 57% பங்கைக் கொண்டிருந்தது.

இந்திய சூரிய சக்தி பேனல் உற்பத்தியாளர்களுக்கு அமெரிக்க சந்தை பெரும்பாலும் சாத்தியமற்றதாக மாறும் என்று சிட்டி ஒரு ஆராய்ச்சிக் குறிப்பில் தெரிவித்துள்ளது. இந்த வரிகள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பிப்ரவரி 24 அன்று அனைத்து நாடுகளுக்கும் அறிவித்த 10% கட்டணங்களிலிருந்து வேறுபட்டவை.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்


மாபெரும் கையெழுத்துப் போராட்டம்
PTA
PSTA
14. 02. 2026 - 25. 02. 2026


LANKA-ASHOK-LEYLAND



